
முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2025

# 32 – வணிகக்கல்வி

## புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

## 32 - வணிகக்கல்வி

வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை மதிப்பிடக்கூடியவாறும் மாணவர்களின் பாடம் தொடர்பான விடயங்கள், அறிவு தர்க்க ரீதியாக ஒப்பிட்டுப் பார்த்து வணிக அனுபவங்களையும், அவை செயற்படும் ஆற்றலையும், வணிக உலகின் போக்குகளையும், செயல்முறை தொடர்பான அறிவு மற்றும் தகவல் தொழிநுட்ப அறிவு போன்றவற்றையும் மிகவும் சிறந்த முறையில் மதிப்பிடுவதற்கு ஏற்ற வகையில் இவ்வினாப்பத்திரத்தில் வினாக்கள் வினவப்பட்டுள்ளன.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

**32 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.

※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**1.** வணிகம் ஒன்று பொருளாதார நடவடிக்கையாக அமைவது, அது
(1) சமுதாய செயற்றிட்டங்களுக்கு அனுசரணை வழங்குவதனாலாகும்.
(2) இலாபத்திற்காக பொருட்கள் அல்லது சேவைகளை பரிமாற்றுவதனாலாகும்.
(3) ஊழியர்களைப் பாராட்டுவதற்காக கொண்டாட்டங்களை ஒழுங்குபடுத்துவதனாலாகும்.
(4) சூழல் பாதுகாப்பிற்காக மீள்சுழற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதனாலாகும்.
(5) கலாசார நல்லிணக்கத்திற்காக உள்நாட்டு பாரம்பரியங்களை மேம்படுத்துவதனாலாகும்.

**2.** பின்வருவன பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உதாரணங்கள் சிலவாகும்.

A - உணவு
B - சிகை அலங்காரம்
C - கற்பித்தல்
D - விளம்பரப்படுத்தல்
E - தொலைக்காட்சி
F - உடைகள்
G - பயிற்சி
H - சரக்கிருப்பு
I - வாகனங்களை வாடகைக்கு விடுதல்
J - கணினி

மேற்குறித்தவற்றுள், சேவைகளுக்கான உதாரணங்களை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?
(1) A, C, E, H, J
(2) A, D, E, G, I
(3) B, C, D, F, G
(4) B, C, D, G, I
(5) C, E, F, I, J

**3.** பின்வரும் அட்டவணையில் வணிகத்தின் மீது அக்கறையுடைய பல்வேறு தரப்பினரும் வணிக நடவடிக்கைகள் சிலவும் காட்டப்பட்டுள்ளன.

| அக்கறையுடைய தரப்பினர் | வணிக நடவடிக்கைகள் |
|---|---|
| (i) அரசு | A - வேலைவாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல் |
| (ii) ஊழியர்கள் | B - உயர்தரமான பொருட்களைக் கொள்வனவு செய்தல் |
| (iii) சமூகம் | C - பெறுகை (Procurement) நடைமுறைகளை இலகுபடுத்தல் |
| (iv) வழங்குனர்கள் | D - நெகிழ்வான வேலை முறைகளை மேம்படுத்தல் |
| (v) வாடிக்கையாளர்கள் | E - உரிய நேரத்தில் வரிகளைச் செலுத்துதல் |

மேலே தரப்பட்டுள்ள அக்கறையுடைய தரப்பினரின் ஒழுங்கிற்கு அமைவாக ஒவ்வொரு தரப்பினரும் அக்கறை செலுத்தும் வணிக நடவடிக்கைகளைச் சரியாகத் தொடர்புபடுத்தும் தெரிவு யாது?
(1) A, B, D, E, C
(2) B, E, D, C, A
(3) C, E, D, B, A
(4) E, B, D, C, A
(5) E, D, A, C, B

4. வணிகமொன்று அதன் ஊழியர்களுக்காக ஒழுக்கப் பொறுப்புக்களை வகிப்பது
(1) சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுவதனூடாகவாகும்.
(2) ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பதனூடாகவாகும்.
(3) நம்பிக்கையான வேலைத்தளத்தினை ஏற்படுத்துவதனூடாகவாகும்.
(4) புதிய சந்தைகளை கண்டறிவதனூடாகவாகும்.
(5) தரமான பொருட்களை வழங்குவதனூடாகவாகும். (..3...)

5. பின்வருவன வணிகமொன்றில் செல்வாக்குச் செலுத்தும் விசைகள் சிலவாகும்.
A - தொழிற்சங்கங்கள் B - வழங்குனர்கள்
C - ஊழியர்கள் D - வேலை விழுமியங்கள் (work norms)
E - போட்டியாளர்கள் F - நிறுவன வளங்கள்
G - நிறுவனக் கொள்கைகள் H - சமூக நடவடிக்கைகள்
I - வாடிக்கையாளர்கள் J - நிறுவனக் கட்டமைப்பு
மேற்குறித்தவற்றுள், வணிகமொன்று நேரடியாகக் கட்டுப்படுத்தக்கூடிய விசைகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
(1) A, C, D, F, J (2) B, C, F, G, J (3) C, D, F, G, I
(4) C, D, F, G, J (5) E, F, G, H, J (..4..)

6. இலங்கை அரச சேவையில் உத்தியோகபூர்வ கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் எண்ணியல் (Digital) கொடுப்பனவுத் தளம் யாது?
(1) அப்பிள்பே (Applepay) (2) கவ்பே (GovPay)
(3) கூகுள்பே (Googlepay) (4) பேபால் (PayPal)
(5) பேஹியர் (PayHere) (..2...)

7. வசதிப் பண்டங்களுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை (VAT) இறுதியாகச் செலுத்துபவர்
(1) உற்பத்தியாளர் (2) சில்லறை வியாபாரி (3) நுகர்வோர்
(4) விநியோகத்தர் (5) மொத்த வியாபாரி (..3..)

8. இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்படும் நியதிச்சட்ட ஒதுக்க விகிதத்தினை அதிகரிப்பது வணிக வங்கிகளின் கடன் வழங்கும் ஆற்றலிலும் வணிகங்கள் கடன் பெற்றுக்கொள்ளும் கிரயத்திலும் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது?

| | கடன் வழங்கும் ஆற்றல் | கடன் பெற்றுக்கொள்ளும் கிரயம் |
|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | மாற்றமில்லை | மாற்றமில்லை |
| (4) | குறையும் | குறையும் |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

(...1...)

9. பின்வருவன நிதிக் கருவிகள் சிலவாகும்.
A - இறையாண்மை (அரச) பத்திரங்கள் B - வைப்புச் சான்றிதழ்கள்
C - திறைசேரி உண்டியல்கள் D - பங்கு ஆணைப்பத்திரங்கள்
E - தொகுதிக்கடன் பத்திரங்கள் F - திறைசேரி முறிகள்
G - அபிவிருத்தி முறிகள் H - வணிகத் தாள்கள்
I - உரிமைப் பங்குகள் J - கூட்டுரு முறிகள்
மேற்குறித்தவற்றுள் கம்பனிகளால் வெளியிடப்படும் நிதிக் கருவிகளை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, E, G, H, I (2) B, D, F, H, I (3) B, E, F, G, I
(4) D, E, H, I, J (5) D, F, H, I, J (..4..)

10. 'வணிக ஒருங்கிணைவு' என்பது
(1) வணிகமொன்றின் செயற்பாடுகள் சிலவற்றை முடிவுறுத்துதலாகும்.
(2) வணிகம் ஒன்றினால் வேறொரு வணிகம் கையகப்படுத்தப்படுதலாகும்.
(3) வணிகமொன்றின் உற்பத்திப்பொருள் கலவையினை (portfolio) பல்வகைப்படுத்தலாகும்.
(4) வணிகமொன்றின் சந்தைக் கலவையினை பல்வகைப்படுத்தலாகும்.
(5) புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்குவதற்கு இரண்டு கம்பனிகளை ஒன்றிணைத்தலாகும். (..5..)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



11. முயற்சியாண்மை எண்ணங்களை பிரயோகரீதியாக மாற்றஞ் செய்யும் செயன்முறை அழைக்கப்படுவது
(1) புதியனவற்றைக் கண்டுபிடித்தல் (2) வடிவமைத்தல்
(3) பிரதிபலனைப் பெறுதல் (4) யதார்த்தமாக்குதல்
(5) சோதனை செய்தல் (..4..)

12. அகமுயற்சியாண்மையாளரின் பிரதான குணாம்சமாவது
(1) வணிகமொன்றினுள் உயர்வான இடரை ஏற்றுக்கொள்ளல்
(2) உரிமையாளர்களை புதிய வணிக முயற்சிகளில் முதலீடு செய்ய ஊக்குவித்தல்
(3) வணிகத்தின் உற்பத்தித்திறனை விருத்திசெய்வதற்குப் புதிய வழிகளைத் தேடுதல்
(4) வணிகத் தீர்மானங்களின் மீது முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல்
(5) வணிகத்தின் தூரநோக்கு மற்றும் இலட்சியநோக்கு ஆகியவற்றின் மீது விசேட கவனம் செலுத்தல் (..3..)

13. பின்வரும் A, B ஆகிய கூற்றுகளைக் கருதுக.
கூற்று A : பசுமை முயற்சியாண்மையாளர்கள் இலாபநோக்கின்றி பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கின்றனர்.
கூற்று B : பசுமை முயற்சியாண்மையாளர்கள் சூழல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு புத்தாக்கத் தீர்வுகளை விருத்தி செய்கின்றனர்.
மேற்குறித்த இரண்டு கூற்றுகளிலும்
(1) A சரியானதாகும் அதேவேளை B தவறானதாகும்.
(2) A தவறானதாகும் அதேவேளை B சரியானதாகும்.
(3) A மற்றும் B ஆகிய இரண்டும் தவறானதாகும்.
(4) A, B ஆகிய இரண்டும் சரியாகும் அதேவேளை B ஊடாக A விபரிக்கப்படுகிறது.
(5) A, B ஆகிய இரண்டும் சரியாகும் அதேவேளை A ஊடாக B விபரிக்கப்படுகிறது. (..2..)

14. இலங்கையின் வரையறுத்த தேசிய கடன் உத்தரவாத நிறுவகம் (NCGIL) உரித்தாவது
(1) பகுதியளவு அரச துறைக்காகும். (2) அரச துறைக்காகும்.
(3) தனியார் துறைக்காகும். (4) கூட்டுறவுத் துறைக்காகும்
(5) அரசு மற்றும் தனியார் துறைகளுக்காகும் (..5..)

15. பின்வருவன இலங்கையின் வணிக வங்கிகள் தமது வங்கியில் கணக்கு வைத்திருப்போருக்கு வழங்கும் வசதிகள் சிலவாகும்.
A - காசோலை வைப்புகள் B - தன்னியக்க கூற்று இயந்திரம் (ATM)
C - தொலைபேசி வங்கிச் சேவை D - மேலதிகப் பற்று
E - குறுஞ்செய்திச் சேவை (SMS) F - வைப்புகளுக்கான வட்டி
G - காசு முற்பணம் H - காசோலை புத்தகங்கள்
மேற்குறித்தவற்றுள் நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கினை வைத்திருக்கும் இரு தரப்பினரும் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, E (2) A, C, E, F (3) B, C, E, G
(4) B, C, G, H (5) D, E, F, G (..1..)

16. பின்வரும் அட்டவணையில் கொடுப்பனவு முறைகள் சிலவும் அவற்றின் சிறப்பம்சங்களும் தரப்பட்டுள்ளன.

| கொடுப்பனவு முறை | சிறப்பம்சங்கள் |
|---|---|
| (i) வங்கி மாற்றல்கள் | A - தற்போது வாங்கு பின்னர் பணம் செலுத்து |
| (ii) வரவு அட்டை | B - செயலிப் பாவனை (App based) |
| (iii) கடன் அட்டை | C - வங்கி ஒன்றினூடாக வங்கிக்கு |
| (iv) எண்ணியல் பணப்பை | D - உடனடிக் கழிப்பனவு |
| (v) காசு (ரொக்கம்) | E - உடனடிக் கொடுப்பனவு |

மேலே தரப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகளின் ஒழுங்கிற்கு அமைவாக அவற்றிற்குரிய சிறப்பம்சங்களை மிகவும் பொருத்தமாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) B, A, C, D, E (2) C, A, D, E, B (3) C, D, A, B, E
(4) E, D, A, B, C (5) E, D, A, C, B (..3..)

17. உற்பத்திப்பொருள் மீள் அழைப்புக்கு எதிராக வணிகங்களுக்கு நிதிப் பாதுகாப்பினை வழங்கும் காப்புறுதி யாது?
(1) தீக் காப்புறுதி (2) பொதுப் பொறுப்புக் காப்புறுதி
(3) வழியில் நின்ற சரக்குக் காப்புறுதி (4) ஊழியர் பொறுப்புக் காப்புறுதி
(5) உற்பத்திப்பொருள் பொறுப்புக் காப்புறுதி (..5..)

**18.** பின்வரும் அட்டவணையில் இலத்திரனியல் தளங்களும் வணிகங்களுக்கான அவற்றின் விசேட பணிகள் சிலவும் தரப்பட்டுள்ளன.

| இலத்திரனியல் தளங்கள் | பணிகள் |
|---|---|
| (i) மெய்நிகர் (Zoom) | A - தொழில்சார் வலையமைப்பு |
| (ii) X கீச்சகம் (Twitter) | B - காணொளி அடிப்படையிலான விளம்பரப்படுத்தல் |
| (iii) வலையொளி (YouTube) | C - செயற்கை நுண்ணறிவினால் மேம்படுத்தப்பட்ட வணிகத் தெளிவுகள் |
| (iv) லிங்ட்இன் (LinkedIn) | D - நேரடி உருவமற்ற (Live Virtual) கூட்டங்கள் |
| (v) சற் ஜீபிரி (chatGPT) | E - குறுஞ் செய்திப் பகிர்வு |

மேலே தரப்பட்டுள்ள இலத்திரனியல் தளங்களின் ஒழுங்கிற்கு அமைவாக அவற்றின் பணிகள் சரியாக தொடர்புபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

(1) B, A, D, E, C (2) B, D, C, A, E (3) C, D, E, A, B
(4) D, E, B, A, C (5) D, E, C, A, B (..4..)

**19.** பொருட்களை நகர்த்துதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் ஆகியவற்றின் முழுமையான செயன்முறையானது

(1) கொள்வனவாகும். (2) போக்குவரத்தாகும்.
(3) ஏற்பாட்டியலாகும். (4) பெறுகையாகும் (Procurement).
(5) விநியோகமாகும். (..3..)

**20.** பின்வருவன வணிகமொன்று கைக்கொள்ளும் தந்திரோபாயங்கள் சிலவாகும்.

A - அங்கீகார வணிகங்கள் B - வெளிவாரி மூலங்களைப் பெற்றுக்கொள்ளல்
C - தந்திரோபாயக் கூட்டணிகள் D - இறக்குமதிகள்
E - கூட்டு முயற்சிகள் F - கடல் கடந்தவைகள்
G - ஏற்றுமதிகள் H - அனுமதிப்பத்திரங்கள் (உரிமம்)

மேற்குறித்தவற்றுள் சர்வதேச சந்தைகளில் பிரவேசிப்பதற்கு வணிகமொன்றினால் கைக்கொள்ளப்படும் கூட்டுத் தந்திரோபாயங்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, C, H (2) A, C, E, H (3) C, D, E, G
(4) C, E, F, H (5) C, F, G, H (...2)

**21.** பின்வருவனவற்றுள் B2C கொடுக்கல்வாங்கலைச் சரியாக விபரிக்கும் உதாரணத்தினை தெரிவுசெய்க.

(1) உள்ளூர் ஆடை உற்பத்தியாளர் ஒருவர் பெருந்தொகையான புடைவைகளை இறக்குமதி செய்தல்
(2) முகவர் ஒருவர், இலண்டனுக்குப் பயணிக்கவிருக்கும் நபர் ஒருவருக்கு விமானப் பயணச்சீட்டை விற்பனை செய்தல்
(3) நபர் ஒருவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருமானவரி செலுத்துதல்
(4) கம்பனி ஒன்று இலங்கைச் சுங்கத்துக்கு இறக்குமதித் தீர்வையைச் செலுத்துதல்
(5) நபர் ஒருவர் நிகழ்நிலைத் தளத்தினூடாக தனது மோட்டார் வாகனத்தை விற்பனை செய்தல் (..2..)

**22.** பின்வரும் அட்டவணையில் முகாமைத்துவ தொழிற்பாடுகளும் அவற்றுக்கான விவரணங்களும் தரப்பட்டுள்ளன.

| தொழிற்பாடுகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) திட்டமிடல் | A - துல்லியமான கண்காணிப்பு மற்றும் அளவீட்டு முறைகளை தாபித்தல் |
| (ii) ஒழுங்கமைத்தல் | B - நிறுவன இலக்குகளையும் நடைமுறைகளையும் தெரிவுசெய்தல் |
| (iii) நெறிப்படுத்தல் | C - ஊக்குவித்தல், ஒருங்கிணைத்தல், ஊழியர்களை வலுவூட்டல் |
| (iv) கட்டுப்படுத்தல் | D - பணி மற்றும் அதிகாரத் தொடர்புகளைத் தாபித்தல் |

மேலே தரப்பட்டுள்ள தொழிற்பாடுகளின் ஒழுங்கிற்கு அமைவாக அதற்குப் பொருத்தமான விவரணங்களை சரியாக கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, D, B (2) B, C, D, A (3) B, D, C, A
(4) C, B, D, A (5) C, D, A, B (..3...)


**23.** மொத்த நிலையான கிரயங்கள் ரூ. 120,000 ஆகவும் பங்களிப்பு எல்லை விகிதம் 60% ஆகவும் காணப்படின் இலாப நட்டமற்ற புள்ளி ரூபாவில் எவ்வளவு?

(1) ரூ. 2 000 (2) ரூ. 12 000 (3) ரூ. 20 000
(4) ரூ. 200 000 (5) ரூ. 720 000 (..4...)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**24.** பின்வரும் அமைப்பு வரைபடத்தைக் கருதுக.




மேலே தரப்பட்டுள்ள அமைப்பு வரைபடத்தின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ள சரியான நிறுவனக் கட்டமைப்பைத் தெரிவுசெய்க.

(1) சாதாரண கட்டமைப்பு
(2) பிரிவுக் கட்டமைப்பு
(3) தொழிற்பாட்டுக் கட்டமைப்பு
(4) தட்டையான கட்டமைப்பு
(5) தாயக் கட்டமைப்பு

(..3..)

**25.** உற்பத்திப்பொருள் அல்லது சேவை ஒன்று குறித்தவொரு வியாபாரிக்கே உரித்தானது என்பதனை எடுத்துக்காட்டும் புலமைச் சொத்து யாது?

(1) பதிப்புரிமை
(2) ஆக்கவுரிமை
(3) வியாபார இரகசியம்
(4) வியாபாரக் குறி
(5) கைத்தொழில் வடிவமைப்பு

(..4..)

**26.** பின்வரும் அட்டவணையில் கம்பனி ஒன்றின் உற்பத்திப்பொருள் கலவையின் சில பரிமாணங்களும் அது தொடர்பான விவரணங்களும் தரப்பட்டுள்ளது.

| பரிமாணங்கள் | விவரணங்கள் |
|---|---|
| (i) அகலம் | A- ஒவ்வொரு உற்பத்திப்பொருள் வரிசையிலுமுள்ள பல்வகைத்தன்மை |
| (ii) நீளம் | B- வித்தியாசமான உற்பத்திப்பொருள் வரிசைகளின் எண்ணிக்கை |
| (iii) ஆழம் | C- உற்பத்திப்பொருள் வரிசைகள் ஒரே விநியோக வழிமுறையைப் பயன்படுத்தல் |
| (iv) மாறாத்தன்மை | D- சகல உற்பத்திப்பொருள் வரிசைகளிலுமுள்ள மொத்த உற்பத்திப்பொருள்களின் எண்ணிக்கை |

மேலே தரப்பட்டுள்ள பரிமாணங்களின் ஒழுங்கிற்கு அமைவாக அவற்றுக்குப் பொருத்தமான விவரணங்களைச் சரியாகக் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, D, B
(2) B, A, D, C
(3) B, D, A, C
(4) D, A, C, B
(5) D, B, A, C

(..3..)

**27.** பின்வரும் அட்டவணையில் ஊழியர் பயிற்சி முறைகள் சிலவும் அவற்றுக்கான விவரணங்களும் தரப்பட்டுள்ளன.

| பயிற்சி முறைகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) தயார்படுத்தல் | A- யதார்த்த வாழ்வின் சம்பவங்களைப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் |
| (ii) உருவகப்படுத்தல் | B- வித்தியாசமான வேலை வகிபாகங்களைக் கற்றல் |
| (iii) வேலையின் போது | C- வேலைச் சூழலுக்கு வெளியே கற்றல் |
| (iv) வேலைச் சுழற்சி | D- வேலையினைச் செய்வதனூடாக கற்றல் |
| (v) வேலைக்கு வெளியே | E- ஒருவருக்கொருவர் வழிகாட்டுவதனூடாக கற்றல் |

மேலே தரப்பட்டுள்ள பயிற்சி முறைகளின் ஒழுங்கிற்கு அமைவாக அதற்குப் பொருத்தமான விவரணங்களை சரியாகக் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, D, B, E
(2) C, A, D, B, E
(3) C, E, B, D, A
(4) E, A, D, B, C
(5) E, D, A, C, B

(..4..)

**28.** பின்வருவனவற்றுள் வணிகமொன்றினது ஊழியர்களின் செயற்றிறன் எந்தக் காரணியின் மூலம் வெளிக்காட்டப்படுகிறது?

(1) ஊழியர் உற்பத்தித்திறன்
(2) தொழிற் பிணக்குகள்
(3) ஊழியர்களின் வரவு
(4) வேலைசெய்த மணித்தியாலங்கள்
(5) பயிற்சி மணித்தியாலங்கள்

(..1..)

**29.** பின்வருவன வணிகமொன்றுடன் தொடர்புடைய தரவுகளும் தகவல்களுமாகும்.

A – சராசரி நாளாந்த விற்பனை: 5 அலகுகள்
B – நாளாந்த விற்பனை: 100 அலகுகள்
C – சராசரி விற்பனைப் புரள்வு: 3%
D – கடன்பட்டோர் புரள்வு விகிதம்: 10%
E – மொத்த செயற்றிறன் புள்ளி: 93
F – கொள்வனவுகள்: 300 அலகுகள்
G – சரக்கிருப்புத் தொகை : 1 000 அலகுகள்
H – மேல்நோக்கிய விற்பனைப் போக்கு: ரூ. 100000

மேற்குறித்தவற்றுள் தகவல்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, C, D, H
(2) A, C, D, E, H
(3) B, C, D, F, G
(4) D, E, F, G, H
(5) D, E, F, H, G

(..2..)

30. முகாமையாளர்கள் தீர்மானம் மேற்கொள்வதில் உதவுவதற்காக தரவுகளைச் சேகரித்தல், செயன்முறைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், வழங்குதல் என்பனவற்றினை மேற்கொள்ளும் தகவல் முறைமை யாது?
(1) நிறைவேற்று உதவி முறைமை (ESS)
(2) முகாமை தகவல் முறைமை (MIS)
(3) தீர்மான உதவி முறைமை (DSS)
(4) கொடுக்கல்வாங்கல்கள் செயன்முறைப்படுத்தல் முறைமை (TPS)
(5) அறிவுச் செயல் முறைமை (KWS) (.2..)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

විෂය අංකය / பாட இலக்கம்: **32**

විෂයය / பாடம்: **வணிகக் கல்வி**

### ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 2 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 3 |
| 03. | 5 | 13. | 2 | 23. | 4 |
| 04. | 3 | 14. | 5 | 24. | 3 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 4 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 3 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 4 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 1 |
| 09. | 4 | 19. | 3 | 29. | 2 |
| 10. | 5 | 20. | 2 | 30. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் : එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු 02 බැගින් / 02 புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 02 × 30 = 6

31. (அ) மனிதத் திருப்தியினை அதிகரிப்பது தொடர்பில் குறித்தவொரு பொருளுக்கான வேட்கை ................................ என குறிப்பிடப்படும். அதேவேளை, அவர்கள் நிலைத்திருப்பதற்கு அத்தியாவசியமான அடிப்படையாக வேண்டப்படுவது ................................ எனக் குறிப்பிடப்படும்.

(ஆ) பங்குடைமையானது ................................ தனிமனித அந்தஸ்தினை கொண்டிராமையினால் பங்காளர்களின் நட்டப்பொறுப்புக்கள் ................................ ஆகும்.

**(அ) விருப்பம், தேவை**

**(ஆ) சட்டரீதியான, வரையறுக்கப்படாதவை**

32. (அ) இலங்கையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் (VAT) நியம வீதமானது ................................ ஆகும். அதேவேளை, முற்பண தனியாள் வருமான வரியின் (APIT) உச்ச வீதம் ................................ ஆகும்.

(ஆ) பங்குதாரருக்கு வருடாந்த நிதி அறிக்கைகளை அனுப்புதல் ................................ தொடர்பாடல் ஊடகத்துக்கான உதாரணமாகும். அதேவேளை, செயற்றிட்ட எண்ணமொன்று தொடர்பில் நண்பர்களுடன் உணவு விடுதியில் கலந்துரையாடுவது ................................ தொடர்பாடல் ஊடகத்துக்கான உதாரணமாகும்.

**(அ) 18, 36**

**(ஆ) எழுத்து மூலமான, வாய்மொழி மூலமான**

33. (அ) S&P இலங்கை 20 விலைச் சுட்டியினைத் தயாரிக்கும்போது திரவத்தன்மை, நிதி ................................ மற்றும் சந்தை ................................ என்பவற்றினூடாக 20 கம்பனிகள் தெரிவுசெய்யப்படும்.

(ஆ) வணிக பல்வகைப்படுத்தலானது நீண்டகால ................................ தீர்மானத்துக்கு உதாரணமாகும். அதேவேளை, பங்கிலாபத் தீர்மானமானது நீண்டகால ................................ தீர்மானத்துக்கு உதாரணமாகும்.

**(அ) சாத்தியம் (feasibility), மூலதனவாக்கம்**

**(ஆ) முதலீட்டு, நிதியீட்டல்**

34. (அ) குறைபாடுகளைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தும் 'செயன்முறை-சார்ந்த' அணுகுமுறை, தர ................................ ஆகும். அதேவேளை, குறைபாடுகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்தும் 'உற்பத்திப்பொருள்-சார்ந்த' அணுகுமுறை தர ................................ ஆகும்.

(ஆ) உற்பத்திப்பொருளின் அலகொன்றினை உற்பத்தி செய்வதற்கு எடுக்கும் காலம் ................................ காலம் எனப்படும். அதேவேளை, கட்டளையிட்டதில் இருந்து அதனைப் பெற்றுக்கொள்ளும் வரையான காலம் ................................ காலம் எனப்படும்.

**(அ) உறுதி, கட்டுப்பாடு**

**(ஆ) சுழற்சி, முதன்மை**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

35. (அ) உற்பத்திப்பொருளொன்றுக்கு குறித்த வாடிக்கையாளர் குழுவினை ஈர்த்துக்கொள் ............................ சந்தையாகும். அதேவேளை, உற்பத்திப்பொருளுக்கு அவர்களின் மன ...............................என அழைக்கப்படுகிறது சார்பான பிரதிமையை உருவாக்குவது சந்தை

(ஆ) சொக்லேட் மேலுறை ............................ பொதியிடலுக்கு உதாரணமாகும். அதேவேளை, ............................ பொதியிடலுக்கு உதாரணமாகு சொக்லேட்டுக்களைக் கொண்ட பெட்டி

**(அ) இலக்கு, நிலைப்படுத்தல் (positioning)**

**(ஆ) முதனிலை / முதலாந்தர, இரண்டாம் நிலை / போக்குவரத்து**

36. (அ) கம்பனி ஒன்றின் உயர் இணைப்பு விகிதமானது ............................ நிதியின் மீது அதி நம்பகத்தன்மையை குறிக்கும். அதேவேளை, தாழ் இணைப்பு விகிதமானது............................ நிதியின் மீது அதிக நம்பகத்தன்மையை குறிக்கின்றது.

(ஆ) பங்கின் பெயரளவு பெறுமதிக்கு மேலதிகமாக முதலீட்டாளர்களால் செலுத்தப்படும் பெறுமதியானது பங் ............................ என அழைக்கப்படுவதுடன், பங்குகளை கொள்வனவு செய்த விலையினை காட்டிலும் அதிக விலைக்கு விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபம் ............................ ஆதாயம் என அழைக்கப்படும்.

**(அ) கடன் மூலதன, உரிமை மூலதன**

**(ஆ) சந்தைப் பெறுமதி / சந்தை விலை, மூலதன**

37. (அ) வேலையொன்றின் பணிகளை அதிகரிப்பது வேலை ............................ என அழைக்கப்படும். அதேவேளை, வேலையொன்றின் சுயாதீனத்தை அதிகரிப்பது வேலை ............................ என அழைக்கப்படும்.

(ஆ) தவறான நடத்தை காரணமாக ஊழியர் ஒருவரின் சேவையினை தொழில் வழங்குனர் முடிவுறுத்துவது சேவை ............................ ஆகக் காணப்படும். அதேவேளை, இழப்பீட்டுக் கொடுப்பனவு அடிப்படையில் மேலதிக ஊழியர்கள் தாமாகவே பதவியில் இருந்து விலகும் திட்டம் ............................ திட்டமாகும்.

**(அ) விரிவுபடுத்தல் / விரிவாக்கம் (enlargement), செறிவூட்டல் / வளப்படுத்தல்(enrichment)**

Dismissal

**(ஆ) நீக்கம் (~~termination~~), தன்னிச்சையான (voluntary)**

38. (அ) வணிகத் திட்டமொன்றின் அடிப்படை விடயங்களை முன்னிலைப்படுத்துவது ............................ சுருக்கத்தினூடாகும். அதேவேளை, வணிகத்தின் சகல உற்பத்திச் செயன்முறையையு முன்னிலைப்படுத்துவது ............................ திட்டத்தினூடாகும்.

(ஆ) அலுவலகமொன்றின் உள்ளேயான கணினி வலைப்பின்னல் அமைப்பு ............................ வலையமைப்புக்கு உதாரணமாகும். அதேவேளை, நாடொன்று தொடர்பிலான கணினி வலைப்பின்ன அமைப்பு ............................ வலையமைப்புக்கு உதாரணமாகும்.

**(அ) நிறைவேற்றுச், செயற்பாட்டு / உற்பத்தி**

**(ஆ) உள்ளூர் (LAN), பரந்த (WAN)**

39. (அ) ISO ........................ ஆனது சூழல் முகாமைத்துவ முறைமையின் மீது கவனம் செலுத்தும். அதேவேளை ISO ........................ ஆனது வலுசக்தி முகாமைத்துவ முறைமையின் மீது கவனம் செலுத்துகிறது.

(ஆ) குற்றமிழைத்த தரப்பினரிடமிருந்து காப்புறுதிக் கம்பனிக்கான கொடுப்பனவினை மீளப்பெற்றுக்கொள்வதற்கான உரிமை ........................ தத்துவமாகும். அதேவேளை, காப்புறுதிக் கம்பனிகள் பலவற்றினூடாக ஒரே காப்புறுதிப் பத்திரத்துக்கு நட்டஈட்டினைச் செலுத்துவது ........................ தத்துவம் ஆகும்.

**(அ) 14001, 50001**

**(ஆ) பதிலாள்வைப்பு, பங்களிப்பு**

40. (அ) பொருட்கள் கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்னர் ஏற்றுமதியாளரால் இறக்குமதியாளருக்கு அனுப்பப்படுவது ........................ பட்டியலாகும். அதேவேளை, பொருட்கள் கப்பலுக்கு ஏற்றப்பட்ட பின்னர் இறக்குமதியாளருக்கு அனுப்பப்படுவது ........................ பட்டியல் ஆகும்.

(ஆ) இறக்குமதியின் பின்னர் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவது ........................ வியாபாரமாகும். என்பதுடன், இறுதியாக செல்ல வேண்டிய இடத்தை அடைவதற்கு முன்னதாக இடையில் துறைமுகமொன்றில் வைத்து கப்பலொன்றில் இருந்து இன்னொரு கப்பலுக்கு பொருட்களை மாற்றும் செயன்முறை ........................ என அழைக்கப்படும்.

**(அ) மாதிரி (Pro-forma), வணிக / வியாபார (Commercial)**

**(ஆ) மீள் ஏற்றுமதி / இறக்கியேற்றல், கப்பல் மாற்றுகை (Transhipment)**

- **41** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குப் **பொருத்தமான விடைகளைத்** தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.

41. வணிகமொன்றினை ஆரம்பிப்பதில் தனியுடைமை வியாபாரி ஒருவர் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகள் நான்கினைக் குறிப்பிடுக.

**1. தனிப்பட்ட சேமிப்பு**
**2. வங்கிக் கடன்கள்**
**3. ஏனைய கடன்கள் (உதாரணம்: நண்பர்களிடமிருந்து)**
**4. வணிகக் கடன்கள்**
**5. அடகுக் / பிணைக் கடன்**
**6. சொத்து விற்பனை மூலமான பணம்**

42. இலங்கையில் காணப்படும் கூட்டுறவு வணிக வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

**1. உற்பத்தியாளர்**
**2. நுகர்வோர்**
**3. கடன் / சேமிப்பு**
**4. பல-நோக்கு**

**அல்லது**

**1. விவசாயம்**
**2. மீன்பிடி / கடல்சார்**
**3. கால்நடை / மிருக வளர்ப்பு**
**4. தெங்கு உற்பத்தி**
**5. தேயிலை உற்பத்தி**
**6. பாடசாலை**
**7. பல-நோக்கு**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

43. சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதியாளர் ஒருவருக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தக் கொடுப்பனவு முறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. நாணயக் கடிதம் (Letter of Credit)
2. வங்கிக் கட்டளை / வங்கி வரைபு
3. காசு முற்பணக் கொடுப்பனவு
4. இலத்திரனியல் கொடுப்பனவு (e-payment)

44. வணிகமொன்று முகில் அடிப்படைக் கணினி முறையை (Cloud based Computing) பயன்படுத்துவதால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. கிரயம் குறைவடைதல்
2. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் இருந்து அணுகலாம்
3. பாதுகாப்பானதாக இருத்தல்
4. நம்பகத்தன்மை
5. அனர்த்தங்களின்போது மீளப் பெற்றுக்கொள்ள முடிதல், இலகுவாக அடைய முடி
6. வினைத்திறனானதாக இருத்தல்
7. வன்பொருள், மென்பொருள், சேமிப்பகம் போன்றவற்றினைக் கொள்வனவு செய்ய தேவையில்லை.
8. பரவலாக்கக்கூடியதாக இருத்தல் (scalability)

45. தொழிற்சாலைத் தளவமைப்பு வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. உற்பத்திப்பொருள் தளவமைப்பு
2. செயன்முறைத் தளவமைப்பு
3. சிறுகலத் / கலத் தளவமைப்பு
4. நிலையான இடத் / நிலையான தளவமைப்பு
5. கலப்புத் தளவமைப்பு (Hybrid Layout)

46. மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் வணிகமொன்றின் வழங்கற் சங்கிலியுடன் தொடர்புடைய தரப் நால்வரைக் குறிப்பிடுக.

1. வழங்குனர்
2. உற்பத்தியாளர் / தயாரிப்பாளர்
3. இடைநடுவர் / விநியோகத்தர் / முகவர்
4. நுகர்வோர் / வாடிக்கையாளர்

47. கம்பனி ஒன்றினது நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு முகாமையானது பங்களிப்புச் செய்யும் வழிமுன் நான்கினைக் குறிப்பிடுக.

1. இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு
2. சமூக நலன்புரி நடவடிக்கைகளை வழங்க
3. சந்தையை விரிவுபடுத்துவதற்கு
4. சந்தைப் பங்கினை அதிகரிக்க
5. வணிகம் செல்லும் பாதையினைத் தீர்மானிப்பதற்கு
6. வணிகக் கருமங்களைத் திட்டமிடுவதற்கு
7. வணிகத்தின் செயற்றிறனை அளவிடுவதற்கு
8. வரையறுக்கப்பட்ட வளங்களை நிறுவனத்தின் பிரிவுகளிடையே பகிர்வதற்கு
9. நிறுவனம் சார்ந்த கருமங்களில் தனிநபர்களை ஈடுபடுத்துவதற்கு

**48.** இலங்கை மத்திய வங்கியின் வகைப்படுத்தலுக்கு அமைவாக நிதி நிறுவக வகைகள் நான்கினைத் தருக.

1. வங்கித் துறை
2. வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
3. விசேட நிதி நிறுவனங்கள்
4. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

**அல்லது**

1. உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (LCBS)
2. உரிமம் பெற்ற விசேட வங்கிகள் (LSBS)
3. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் (LFCS)
4. பதிவு செய்யப்பட்ட விசேட குத்தகைக் கம்பனிகள்
5. உரிமம் பெற்ற நுண்நிதி நிறுவனங்கள்
6. உரிமம் பெற்ற முதல்நிலை வணிகர்கள்
7. அங்கீகாரம் பெற்ற பணத் தரகுக் கம்பனிகள்

1

**49.** பின்வரும் ஒவ்வொரு நிகழ்வும் வணிகமொன்றிற்கு பலமா, பலவீனமா, வாய்ப்பா, அச்சுறுத்தலா (SWOT) என்பதனைச் சரியாகக் குறிப்பிடுக.

| நிகழ்வுகள் | (SWOT) |
|---|---|
| (A) பல்கலைக்கழகங்களுடன் பங்காளராதல் | (1) ........................ |
| (B) வினைத்திறனான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | (2) ........................ |
| (C) ஊழியர் சந்தையில் திறன்களின் பற்றாக்குறை | (3) ........................ |
| (D) குறைவான ஊழியர் அர்ப்பணிப்பு எடுத்துக்காட்டப்படல் | (4) ........................ |

1. வாய்ப்பு (O)
2. பலம் (S)
3. அச்சுறுத்தல் (T)
4. பலவீனம் (W)

**50.** சர்வதேச ரீதியாகப் பயன்படுத்தப்படும் பின்வரும் ஒவ்வொரு நாணய சுருக்கெழுத்தினாலும் குறிப்பிடப்படும் நாணயத்தின் சரியான பெயரினைத் தருக.

(1) **USD** : ........................................................................................

(2) **JPY** : ........................................................................................

(3) **GBP** : ........................................................................................

(4) **LKR** : ........................................................................................

1. ஐக்கிய அமெரிக்க டொலர்
2. ஜப்பானிய யென்
3. பெரிய பிரித்தானிய பவுண்ஸ்
4. இலங்கை ரூபா



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

**32 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** தொழிற்றுறைக்குப் புதியவர்களான பொறியியலாளர்கள் இருவரால் 'பெஸ்ற் லீவ்ஸ் விடுதி' ஆரம்பிக்கப்பட்டது. அதன் வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்பான சேவைகளை வழங்குவதற்காக நிரந்தர மற்றும் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேவையாற்றக்கூடிய அனுபவம் வாய்ந்த மற்றும் திறனுள்ள ஐம்பது ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். எவ்வாறாயினும், நாளாந்தக் கொடுப்பனவினைப் பெறுபவர்களின் ஊழியப் புரள்வு வீதமானது தொழிற்றுறையின் சாதாரண அளவினைவிட உயர்வாக இருக்கின்றமை உரிமையாளர்களால் அவதானிக்கப்பட்டது. விடுதியினால் எவ்வேளையிலும் வாடிக்கையாளர்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்கள் மரியாதையுடன் நடாத்தப்படுவது உறுதிசெய்யப்படுகின்றது. விருந்தினர்களின் தங்குமிடங்களைச் சுத்தமாகப் பேணுதல், பாதுகாப்பு மற்றும் நேர்த்தியினை உறுதிப்படுத்துவதுடன் சுவையான, இயற்கையான, ஆரோக்கியமான உணவுகளை வழங்குவதனூடாக வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதனை விடுதி எவ்வேளையிலும் உறுதிசெய்கிறது. மேலும், அரசினால் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் ஊடாகவும் ஏனைய மேம்படுத்தல் நடவடிக்கைகளின் ஊடாகவும் சுற்றுலாத்துறையின் விருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு சில குழுக்களினால் சுற்றுலாத்துறை தொடர்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

(i) (அ) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியினால் நிறைவேற்றப்படும் வாடிக்கையாளர்களின் தேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியினால் கவனம் செலுத்தப்படும் வாடிக்கையாளர் விருப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியானது பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வழிகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக இவ்விடுதியானது கைக்கொள்ளும் தந்திரோபாயங்கள் **இரண்டினை** இனங்காண்க. (02 புள்ளிகள்)

(iii) (அ) மேற்குறித்த சம்பவக்கற்கையில் குறிப்பிடப்படும் அக்கறையுடைய தரப்பினர் நால்வரைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த சம்பவக்கற்கையினை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறைக்கான வாய்ப்பு **ஒன்றினையும்** அது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் **ஒன்றினையும்** இனங்காண்க. (02 புள்ளிகள்)

(iv) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியின் பலவீனங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றினாலும் விடுதிக்கு ஏற்படும் ஒவ்வொரு தாக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) சூழலின் நிலைபேறான தன்மையினைப் பேணுவதற்கு விடுதியானது மேற்கொள்ளக்கூடிய அடிப்படைச் செயற்பாடுகள் **இரண்டினைச்** சிபாரிசு செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) இவ்விடுதி பின்பற்றக்கூடிய ஒழுக்கவியற் பிரயோகங்கள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. ஆயிசா மற்றும் ரூபினி ஆகியோர் சிற்றளவிலான பங்குடைமை ஒன்றினை ஆரம்பித்தனர். இவ்வணிகமானது உள்ளூரில் கிடைக்கப்பெறும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பாரம்பரிய கைவினைப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றது. அவர்கள் வியாபாரப் பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 'நிர்மாணி' என இப்பங்குடைமை வணிகத்தின் பெயரினைப் பதிவு செய்ததுடன், ஏனைய சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அதனைத் தொழில் திணைக்களத்திலும் பதிவு செய்திருந்தனர்.

(i) (அ) பங்குடைமை உடன்படிக்கையானது பங்குடைமை உறுதியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (02 புள்ளிகள்)

(ஆ) பங்குடைமை உறுதி ஒன்றினால் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) ஆயிசாவும் ரூபினியும் தமது பங்குடைமையினை வியாபாரப் பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தமைக்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த வணிகத்தினை தொழில் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான தேவை யாதென்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) வரையறுத்த தனியார் கம்பனியுடன் ஒப்பிடும்போது பங்குடைமையில் காணப்படும் வரையறைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக வகைப்படுத்தலின் கீழ் உற்பத்தியின் தன்மைக்கு அமைவாக இப்பங்குடைமை எவ்வகைக்கு உரித்துடையது என்பதனைக் குறிப்பிட்டு, அதற்கான காரணமொன்றினைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதனால் பொருளாதாரமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சுற்றுலாப் பயணிகளிடையே தமது வணிகத்தின் விற்பனை அளவினை அதிகரிப்பதற்கு ஆயிசாவும் ரூபினியும் பின்பற்றக்கூடிய முறைகள் **இரண்டினைப்** பிரேரிக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ) இவ்வணிகமானது 'நிர்மாணி' எனும் பெயரில் நடைமுறைக் கணக்கொன்றினை ஆரம்பிக்க முடியுமா? உமது விடைக்கான காரணமொன்றினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) காசோலைகளில் 'கைமாற்றத்தகாதது' மற்றும் 'பெறுவோன் கணக்கு மட்டும்' ஆகிய குறுக்குக் கோடிடல்களுக்கு இடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (i) (அ) முயற்சியாண்மையாளர் முயற்சியாண்மையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மையாளர்களின் வெற்றியில் போட்டித்தன்மை செல்வாக்குச் செலுத்தும் வழிகள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) வங்கிப் பணத்திற்கும் அண்மித்த பணத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) காசோலை ஒன்றின் 'வரையறுக்கப்பட்ட சாட்டுதல்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(iii) (அ) விசேட குத்தகை நிதியாக்கற் கம்பனிகள் (SLC) ஊடாக வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகம் ஒன்று தொடர்பில் பொருளாதார விலை உறுதித்தன்மையானது முக்கியமாவது ஏன் என்பதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) வகிபாகத்தினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் காப்புறுதிக் கம்பனிகளால் வழங்கப்படும் பொதுக் காப்புறுதி வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) சமூக ஊடகப் பயன்பாட்டினால் வணிகமொன்றிற்கு ஏற்படும் பிரதிகூலங்கள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இடைநடுவரற்ற இலத்திரனியல் வர்த்தகத்தினால் வாடிக்கையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (i) (அ) ஏற்பாட்டியலில் எண்ணியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதனால் வணிகமொன்றிற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) குறிப்பிட்ட சில உற்பத்திப்பொருட்கள் வேகமாகவும் விரைவாகவும் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) தன்னியக்கக் களஞ்சிய முறைமையினால் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) 'தரகு முகவர்', 'தரகர்' ஆகியோருக்கு இடையிலான வேறுபாட்டினை இனங்காண்க. (02 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iii) (அ) போக்குவரத்தில் கொள்கலன்மயமாக்கலினால் இறக்குமதியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) கப்பல் தளம் மட்டும் இலவசம் (FOB) மற்றும் விலை சுடு கேழ்வு (CIF) ஆகிய விலையிடல்களுக்கு இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(iv) (அ) சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் உற்பத்தி நாட்டுச் சான்றிதழின் நோக்கங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் வணிகமானது எவ்வாறு இலத்திரனியல் வர்த்தகத்தில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(v) உற்பத்தி நிறுவனமொன்று ஒருங்கிணைந்த கணினி உற்பத்தி முறையினைப் (CIM) பயன்படுத்துவதனால் பெற்றுக்கொள்ளத்தக்க அனுகூலங்கள் **நான்கினைத்** தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

**5.** மாயாவும் காயாவும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் தாபித்தனர். நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான மாயா, ஊழியர்களின் வெவ்வேறு நடத்தை மற்றும் பணிகளின் தன்மைக்கேற்ப தனது தலைமைத்துவப் பாங்கினைக் கைக்கொள்கின்றார். தொழிற்றுறையின் சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும்போது இந்நிறுவனத்தின் உற்பத்திக் கிரயம் வானுயர்ந்து காணப்படுவதனால் செயற்பாட்டு முகாமையாளரான காயா உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான வழிவகைகளைக் கவனத்திற் கொண்டுள்ளார்.

(i) (அ) மாயா கைக்கொள்ளும் தலைமைத்துவப் பாங்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பணிகளின் தன்மைக்கேற்ப தலைவர்கள் தமது நடத்தைகளை ஏன் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) இத்தொழிற்சாலையின் ஊழிய உற்பத்தித்திறனை விருத்தி செய்துகொள்ளக்கூடிய வழிகள் **இரண்டினைச்** சிபாரிசு செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாயாவிடமுள்ள வலு மூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) தைத்த ஆடை உற்பத்தியில் சர்வதேச நியமங்களை உள்வாங்குவதனால் உற்பத்தியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திக் கழிவுகளைக் குறைப்பதற்கு தர உறுதிப்பாடானது எவ்வாறு உதவுகின்றது என்பதனை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) 'புள்ளிவிபரச் செயன்முறைக் கட்டுப்பாடு' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியில் புள்ளிவிபரச் செயன்முறைக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதன் மூலம் இவ்வணிகம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) பின்வருவன 2025 ஒகஸ்ட் மாதத்திற்கான மாயா மற்றும் காயா வணிகத்துடன் தொடர்புடைய சில தரவுகளாகும்.

| | |
|---|---|
| உண்மையான உற்பத்தி | - 17 800 அலகுகள் |
| உண்மையான மூலப்பொருள் பாவனை | - 10 500 கிலோகிராம் |
| ஓர் அலகிற்கான நியம மூலப்பொருள் பாவனை | - 0.5 கிலோகிராம் |
| நியம மூலப்பொருள் கிரயம் | - கிலோகிராமிற்கு ரூ. 4.50 |

மூலப்பொருள் பாவனை மாறற்றிறனைக் கணிப்பிட்டு, அம்மாறற்றிறனுக்கான காரணத்தினைத் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** அமலன் என்பவர் குழந்தைகளின் பாதணிகளுக்கான தேவை அதிகரிப்பதனை இனங்கண்டதன் மூலம் காலியில் பாதணி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தார். சந்தைக் கலவையினைத் தீர்மானிப்பது தொடர்பில் அவரால் பெற்றோர்களினதும் குழந்தைகளினதும் விருப்பங்களும் எதிர்பார்ப்புகளும் அளவையாய்வில் உட்படுத்தப்பட்டன. அதன்படி அமலனால் 'கிற்றா' எனும் பெயரிலான கவர்ச்சிகரமான பண்டக்குறியொன்று உருவாக்கப்பட்டதுடன் குழந்தைகளையும் பெற்றோர்களையும் இலக்காகக் கொண்ட விளம்பரப்படுத்தல் மேம்படுத்தல் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது குழந்தைகளுக்கான பாதணி விற்பனையானது இருமடங்காகியிருந்தது. ஆயினும் அமலன் காசுப் பாய்ச்சல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

(i) (அ) தனது உற்பத்திப்பொருட்களுக்கு அமலன் பயன்படுத்திய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கருவினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) விளம்பரப்படுத்தலுக்கும் பிரசித்தப்படுத்தலுக்கும் இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(ii) (அ) சிறந்த பண்டக்குறிப்பெயர் ஒன்றின் குணாம்சங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) குழந்தைகள் பாதணிச் சந்தையினை துண்டமாக்குவதற்கு அமலனால் பயன்படுத்தக்கூடிய அடிப்படைகள் **இரண்டினைச்** சிபாரிசு செய்க. (02 புள்ளிகள்)

(iii) (அ) குழந்தைகளுக்கான பாதணிகளை வடிவமைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய உற்பத்திப்பொருள் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'கிற்றா' பண்டக்குறியைக் கொண்ட பாதணிகள், உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்திற்கமைய (PLC) எந்தக் கட்டத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை காரணமொன்றுடன் இனங்காண்க. (02 புள்ளிகள்)

(iv) (அ) குழந்தைகளுக்கான பாதணிகளின் விலையினைத் தீர்மானிப்பதில் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) விற்பனைகள் அதிகரித்திருந்தபோதிலும் அமலன் காசுப் பாய்ச்சல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டமைக்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) அமலன் தனது தனிப்பட்ட சேமிப்பினை அல்லது வங்கிக் கடனைப் பயன்படுத்தி தனது வணிகத்தை விரிவுபடுத்தத் திட்டமிடுகின்றார். நீர் அவருக்கு எத்தெரிவினைச் சிபாரிசு செய்வீர்? நீர் சிபாரிசு செய்த தெரிவில் காணப்படும் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. (i) (அ) 'முயற்சி மூலதனம்' (Venture Capital) என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) திறைசேரி உண்டியல்களுக்கான முதலாம்தரச் சந்தைக்கும் இரண்டாம்தரச் சந்தைக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) கம்பனி ஒன்றின் ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்படுவதன் நோக்கங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) உரிமை மீதான திரும்பலுக்கும் (ROE) முதலீட்டின் மீதான திரும்பலுக்கும் (ROI) இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(iii) (அ) 'ஒருவருக்கொருவரான நேர்முகப் பரீட்சை' (one-on-one interview) மற்றும் 'குழு நேர்முகப் பரீட்சை (Panel interview) ஆகியவற்றுக்கு இடையிலான **இரண்டு** வேறுபாடுகளை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர்களுக்கு நிறுவனம்சார் மன அழுத்தத்தினை ஏற்படுத்தும் காரணிகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர் ஒருவருக்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வதனால் உள்வாரி ஊழியர்கள் எதிர்நோக்கும் பாதகமான தாக்கங்கள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ) மனித வள தகவல் முறைமையினைப் (HRIS) பயன்படுத்துவதனால் மனித வள முகாமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றினை** விளக்குக.

1. உபகரணங்களை அடிப்படையாகக் கொண்ட இணையம் (Internet of Things - IoT)
2. ஒரு தடவைக்கான கடவுச்சொல் (One Time Password - OTP) (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8. (i) (அ) வணிகத் தொடர்பாடலை முன்னேற்றுவதற்கு தகவல் தொழில்நுட்பம் உதவும் வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'மெய் நேர தரவு செயன்முறைப்படுத்தல்' (Real-time data processing) மற்றும் 'தொகுதித் தரவு செயன்முறைப்படுத்தல்' (Batch data processing) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) கொடுப்பனவு நுழைவாயிலைப் (Payment gateway) பயன்படுத்துவதனால் வணிகம் ஒன்றின் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் திட்டம் ஒன்றிற்குச் சந்தை ஆய்வு தேவைப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைப்** பரிந்துரைக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) எழுத்திலான வணிகத் திட்டம் ஒன்றினைக் கொண்டிருப்பதன் மூலம் நிறுவனமொன்றிற்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) 'உற்பத்தி மேந்தலைக் கிரயம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(iv) (அ) வணிகத் திட்டமொன்றினை உருவாக்குவதில் அந்நிறுவனத்தின் தூரநோக்கு எவ்வாறு உதவுகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) நாடொன்றின் திறனுள்ள ஊழியப்படையின் வெளியேற்றமானது உற்பத்தித் துறையின் வணிகத் திட்டமிடலில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ) 'தொழிற்படு மூலதன முகாமை' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) வணிகச் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் நிதி சாரா அளவீடுகள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

1. தொழிற்றுறைக்குப் புதியவர்களான பொறியியலாளர்கள் இருவரால் 'பெஸ்ற் லீவ்ஸ் விடுதி' ஆரம்பிக்கப்பட்டது. அதன் வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்பான சேவைகளை வழங்குவதற்காக நிரந்தர மற்றும் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேவையாற்றக்கூடிய அனுபவம் வாய்ந்த மற்றும் திறனுள்ள ஐம்பது ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். எவ்வாறாயினும், நாளாந்தக் கொடுப்பனவினைப் பெறுபவர்களின் ஊழியப் புரள்வு வீதமானது தொழிற்றுறையின் சாதாரண அளவினைவிட உயர்வாக இருக்கின்றமை உரிமையாளர்களால் அவதானிக்கப்பட்டது. விடுதியினால் எவ்வேளையிலும் வாடிக்கையாளர்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்கள் மரியாதையுடன் நடாத்தப்படுவது உறுதிசெய்யப்படுகின்றது. விருந்தினர்களின் தங்குமிடங்களைச் சுத்தமாகப் பேணுதல், பாதுகாப்பு மற்றும் நேர்த்தியினை உறுதிப்படுத்துவதுடன் சுவையான, இயற்கையான, ஆரோக்கியமான உணவுகளை வழங்குவதனூடாக வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதனை விடுதி எவ்வேளையிலும் உறுதிசெய்கிறது. மேலும், அரசினால் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் ஊடாகவும் ஏனைய மேம்படுத்தல் நடவடிக்கைகளின் ஊடாகவும் சுற்றுலாத்துறையின் விருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு சில குழுக்களினால் சுற்றுலாத்துறை தொடர்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

(i) (அ) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியினால் நிறைவேற்றப்படும் வாடிக்கையாளர்களின் தேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியினால் கவனம் செலுத்தப்படும் வாடிக்கையாளர் விருப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(அ)**

1. உணவு
2. தங்குமிடம் /
3. பாதுகாப்பு

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)**

1. **வாடிக்கையாளர்களின் தனித்துவத்தைப் பேணுதலும் உறுதிசெய்தலும்**
2. **சூழலைத் தூய்மையானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் நேர்த்தியாகவும் பேணுதல்**
3. **ஆரோக்கியமான, சுவையான உணவுகளை வழங்குதல்**
4. **வாடிக்கையாளரை சிநேகபூர்வமாக மரியாதையுடன் கையாளுதல்**

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ii) (அ) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியானது பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வழிகள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக இவ்விடுதியானது கைக்கொள்ளும் தந்திரோபாயங்கள் இரண்டினை இனங்காண்க. (02 புள்ளிகள்)

**(அ)**

1. **வேலைவாய்ப்புக்களை வழங்குதல்**
2. **வெளிநாட்டு செலாவணியை உழைத்தல்**
3. **சுற்றுலாத்துறை மூலம் வருமான மூலங்களை அதிகரித்தல்**
4. **இயற்கையான (organic) உணவு உற்பத்தியை மேற்கொள்வதன் மூல உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிப்பு செய்தல்**
5. **அரசு வருமானத்தினை உழைத்துக் கொள்ளப் பங்களிப்புச் செய்தல்**

வரி வருமானம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்**

**(ஆ)**

1. **சூழலைத் தூய்மையாகப் பேணுதல்**
2. **ஆரோக்கியமான, இயற்கையான உணவுகளை வழங்குதல்**
3. **உயர்தரமான சேவைகளை வழங்குதல்**
4. **வாடிக்கையாளருக்கு மதிப்பளித்தல்**

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்**

(iii) (அ) மேற்குறித்த சம்பவக்கற்கையில் குறிப்பிடப்படும் அக்கறையுடைய தரப்பினர் நால்வரைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த சம்பவக்கற்கையினை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறைக்கான வாய்ப்பு ஒன்றினையும் அது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் ஒன்றினையும் இனங்காண்க. (02 புள்ளிகள்)

**(அ)**

1. **உரிமையாளர் / முதலீட்டாளர்** / போட்டியாளர்
2. **ஊழியர்கள்**
3. **வாடிக்கையாளர் / நுகர்வோர்** / சுற்றுலாப் பயணிகள்
4. **அரசாங்கம்**
5. **வழங்குனர்**
6. **அழுத்தக் குழுக்கள்**

**($^1/_2$ x 4 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)** **வாய்ப்பு** : சுற்றுலாத்துறையானது அரசினால் வெளிநாட்டுத் தூதரகங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுதல்

**(01 புள்ளி)**

**அச்சுறுத்தல்:** அழுத்தக் குழுக்களால் ஏற்படுத்தப்படும் தடங்கல்கள் (தடைகள்)

**(01 புள்ளி)**

(iv) பெஸ்ற் லீவ்ஸ் விடுதியின் பலவீனங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றினாலும் விடுதிக்கு ஏற்படும் ஒவ்வொரு தாக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

1. ஊழியர் புரள்வு அதிகரித்தல் – இதனால் தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சியளித்தல் கிரயங்கள் அதிகரித்தல், சேவைத் தரம் குறைவடைதல்
2. அனுபவம் குறைவான உரிமையாளர்கள் – இவர்களின் தவறான முகாமைத் தீர்மானங்களால் வணிகத்தின் வளர்ச்சி தடைப்படுதல்

**(குறிப்பிட 01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**
**(விளக்க 01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(v) (அ) சூழலின் நிலைபேறான தன்மையினைப் பேணுவதற்கு விடுதியானது மேற்கொள்ளக்கூடிய அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைச் சிபாரிசு செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) இவ்விடுதி பின்பற்றக்கூடிய ஒழுக்கவியற் பிரயோகங்கள் இரண்டினை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**(அ)**

1. சூழலுக்கு நேயமான பொருட்களைக் கொள்வனவு செய்தல்
2. கழிவு முகாமைத்துவத்தை சரியாகச் செய்தல்
3. மீளாக்கம் செய்யக்கூடிய சூரியசக்தியைப் பயன்படுத்தல்
4. இயற்கையான (organic) உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல்
5. சூழல் தொடர்பான சட்டப் பிரமாணங்களைப் பின்பற்றுதல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)**

1. நியாயமான சம்பளத்தை வழங்குதல்
2. நியாயமான விலையில் நுகர்வோருக்கு சேவை வழங்குதல்
3. வாடிக்கையாளரைத் தவறாக வழிநடாத்தாமை
4. ஊழியருக்கு சாதகமான வேலைச் சூழலை உருவாக்குதல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

2. ஆயிசா மற்றும் ரூபினி ஆகியோர் சிற்றளவிலான பங்குடைமை ஒன்றினை ஆரம்பித்தனர். இவ்வணிகமான உள்ளூரில் கிடைக்கப்பெறும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பாரம்பரிய கைவினைப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றது. அவர்கள் வியாபாரப் பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 'நிர்மாண' என இப்பங்குடைமை வணிகத்தின் பெயரினைப் பதிவு செய்ததுடன், ஏனைய சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அதனைத் தொழில் திணைக்களத்திலும் பதிவு செய்திருந்தனர்.

(i) (அ) பங்குடைமை உடன்படிக்கையானது பங்குடைமை உறுதியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (02 புள்ளிகள்)

(ஆ) பங்குடைமை உறுதி ஒன்றினால் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் இரண்டினைக் கருக. (02 புள்ளிகள்)

**புள்ளியிடும் திட்டம் பக்கம்- 24**
**வினா இலக்கம் 2 (i) அ**

பங்குடைமை வணிகமொன்றினை ஆரம்பித்து நடாத்திச் செல்வது தொடர்பில் **பங்காளர்களிடையே வாய்மொழி அல்லது நடத்தை அல்லது எழுத்து மூலமாக ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஓர் உடன்படிக்கை பங்குடைமை ஒப்பந்தமாகும்.**
பங்காளர்களிடையே எழுத்து மூலமாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையை சட்டரீதியாகப் பதிவு **செய்து கொள்ளுமிடத்து அது பங்குடைமை உறுதி என அழைக்கப்படும்.**
(பொருத்தமான வேறுபாட்டிற்கு 02 புள்ளிகள்)

(ஆ)
1. பங்காளர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளலாம் / தீர்த்துக் கொள்ளமுடியும்
2. சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை
3. பங்குடைமையின் வணிகக் கருமங்களை வழி நடாத்திச் செல்லலாம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ii) (அ) ஆயிசாவும் ரூபினியும் தமது பங்குடைமையினை வியாபாரப் பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த வணிகத்தினை தொழில் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான தேவை யாதென்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(அ)
1. இவ்வணிகத்தின் பெயரானது உரிமையாளர்களின் பெயரில் அல்லாது பொதுப் பெயரில் காணப்படுவதனால்
2. சட்ட ரீதியான தன்மையினை உறுதிப்படுத்தலாம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

**புள்ளியிடும் திட்டம் பக்கம்- 24**
**வினா இலக்கம் 2 (ii) ஆ**

ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியக் கணக்கினைப் பேணுவதற்கு நிறுவனத்தினை தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்து கொள்வது அத்தியாவசியமானது என்பதனாலாகும்

(02 புள்ளிகள்)

(iii) (அ) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியுடன் ஒப்பிடும்போது பங்குடைமையில் காணப்படும் வரையறைகள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக வகைப்படுத்தலின் கீழ் உற்பத்தியின் தன்மைக்கு அமைவாக இப்பங்குடைமை எவ்வகைக்கு உரித்துடையது என்பதனைக் குறிப்பிட்டு, அதற்கான காரணமொன்றினைத் தருக. (02 புள்ளிகள்)

**(அ)**

1. சட்ட ஆளுமையின்மை
2. தொடர்ந்தியங்கும் தன்மையின்மை
3. வரையறுக்கப்பட்ட மூலதனம்
4. வரையறுக்கப்படாத பொறுப்பு

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)** மூன்றாம் நிலைக்கு **(குறிப்பிட 01 புள்ளி)**

**காரணம்:** பாரம்பரிய கைவினைப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வது ஒரு சேவையாகும்.

**(காரணம் 01 புள்ளி)**

(iv) (அ) உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதனால் பொருளாதாரமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சுற்றுலாப் பயணிகளிடையே தமது வணிகத்தின் விற்பனை அளவினை அதிகரிப்பதற்கு ஆயிசாவும் ரூபினியும் பின்பற்றக்கூடிய முறைகள் இரண்டினைப் பிரேரிக்குக. (02 புள்ளிகள்)

**(அ)**

1. வெளிநாட்டு செலாவணியை சேமிக்க முடியும்
2. உள்நாட்டு வருமான மூலங்களை அபிவிருத்தி செய்யலாம்
3. உள்ளூர் வேலைவாய்ப்புக்களை உருவாக்கலாம்
4. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கலாம்
5. சூழல் நேயத்தை விருத்தி செய்யலாம்
6. உள்நாட்டு கைத்தொழிலை விருத்தி செய்யலாம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)**

1. விற்பனை மேம்படுத்தல் தந்திரோபாயங்களைப் பிரயோகித்தல்
2. விலைக் குறைப்புக்களை மேற்கொள்ளல்
3. நிகழ்நிலை விற்பனையை ஏற்படுத்தல் / இணையத்தினூடாக விற்பனை செய்தல்
4. சுற்றுலாப் பயணிகளுக்கான புதிய வடிவமைப்புக்களை உருவாக்குதல்
5. சுற்றுலா முகவர்களுடன் சிறந்த உறவினைக் கட்டியெழுப்புதல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(v) (அ) இவ்வணிகமானது 'நிர்மாணி' எனும் பெயரில் நடைமுறைக் கணக்கொன்றினை ஆரம்பிக்க முடியுமா? உமது விடைக்கான காரணமொன்றினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) காசோலைகளில் 'கைமாற்றத்தகாதது' மற்றும் 'பெறுவோன் கணக்கு மட்டும்' ஆகிய குறுக்குக் கோடிடல்களுக்கு இடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(அ) (01 புள்ளி)

ஆம்

**காரணம்:**

சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்ட அமைப்பு என்பதனால் (01 புள்ளி)

(ஆ)

**கைமாற்றத்தகாதது:**

இக்காசோலையினைப் புறக்குறிப்பிட்டு இன்னொருவருக்குச் சாட்டுதல் செய்ய முடியும் என்பதுடன் அக்காசோலையினை சாட்டுதல் செய்யும்போது சாட்டப்படுவோனுக்கு சாட்டுபவரைவிடக் கூடிய உரிமை கிடைக்கப்பெறாது என்பதாகும். (01 புள்ளி)

**பெறுவோன் கணக்கு மட்டும்:**

காசோலையில் பெயர் குறிப்பிட்ட பெறுபவரின் வங்கிக் கணக்கில் மாத்திரம் அதனை வைப்புச் செய்து பணமாக மாற்ற முடியும் என்பதாகும். (01 புள்ளி)

3. (i) (அ) முயற்சியாண்மையாளர் முயற்சியாண்மையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மையாளர்களின் வெற்றியில் போட்டித்தன்மை செல்வாக்குச் செலுத்தும் வழிகள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(அ) முயற்சியாண்மையாளர் என்பவர் வணிக வாய்ப்புக்களை உருவாக்கி புத்தாக்கங்களை மேற்கொண்டு இடர்களைப் பொறுப்பேற்பவர். (01 புள்ளி)

முயற்சியாண்மையென்பது முயற்சியாண்மையாளரால் மேற்கொள்ளப்படும் ஒரு தொகுதி நடவடிக்கைச் செயன்முறையாகும். (01 புள்ளி)

(ஆ)

1. பலவீனங்களை இனங்கண்டு கொள்வதால் அவற்றைக் குறைத்து போட்டிக்கு முகங்கொடுக்க செய்வதற்கு
2. தற்போதைய போட்டித் தன்மையானது புத்தாக்கத்தினை அபிவிருத்தி செய்யும்.
3. போட்டியை எதிர்கொள்ள குறைந்த கிரய முறைகளை அமுலாக்குவதனூடாக முயற்சியாண்மையினை வெற்றியடையச் செய்வதற்கு
4. விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளில் மீது கவனம் செலு... வாய்ப்புக்களை வழங்குவதற்கு
5. ஏனைய வணிகங்களை விட நுகர்வோர் தேவை விருப்பங்களை அதிகளவு நிறைவேற்ற ஊக்குவிக்கப்படுவதற்கு
6. தொடர் விருத்தியினை வழங்குவதற்கு
7. தரமான பொருட்களை வழங்குவதற்கு

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளி)

(ii) (அ) வங்கிப் பணத்திற்கும் அண்மித்த பணத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) காசோலை ஒன்றின் 'வரையறுக்கப்பட்ட சாட்டுதல்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

**(அ)**

| வங்கிப் பணம் | அண்மிய பணம் |
|---|---|
| • வணிக வங்கிகளின் நடைமுறைக் கணக்குகளில் பேணப்படும் மீதி | • வணிக வங்கிகளில் காணப்படும் பொதுமக்களின் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல், வணிகப் பத்திரம் போன்றவை |
| • காசோலை மூலமாக கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ள முடியும் | • காசோலை மூலமாக கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ள முடியாது |
| • பெறுமானத் திரட்டாகத் தொழிற்படாது | • பெறுமானத் திரட்டாகத் தொழிற்படும் |
| • அண்மிய பணத்தைக் காட்டிலும் அதிக திரவத்தன்மை | • ஒப்பீட்டளவில் திரவத்தன்மை குறைவு |

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)** காசோலையொன்றின் பயன்பாட்டினையும் கைமாற்றுதலையும் வரையறுக்கும் சாட்டுதலாகும்.

**உதாரணம்:-** சமந்த பெரேராவுக்கு மட்டும் செலுத்துக. **(02 புள்ளிகள்)**

(iii) (அ) விசேட குத்தகை நிதியாக்கற் கம்பனிகள் (SLC) ஊடாக வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகம் ஒன்று தொடர்பில் பொருளாதார விலை உறுதித்தன்மையானது முக்கியமாவது ஏன் என்பதற்கான காரணங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

**(அ)**

1. பாரிய பெறுமானங் கொண்ட சொத்துக்களை முழுத் தொகையையும் செலுத்தாமல் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறல்
2. குத்தகைக்காக செலுத்தப்படும் கட்டணத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்பைப் பெறமுடிதல்
3. இயந்திரம் மற்றும் ஏனைய சொத்துக்கள் காலங்கடந்தவையாகும்போது ஏற்படுகின்ற நட்டங்களையும் மூலதன நட்டங்களையும் தவிர்க்க முடிதல்
4. பாரியளவு தொகையை முதலீடு செய்யாது அதிகளவில் வருமானம் ஈட்ட முடிதல்
5. தவணைக் கட்டணங்களை அந்தந்த சொத்துக்களின் மூலம் கிடைக்கும் திரும்பல் மூலம் உழைக்கும் போதே இலகுவாகச் செலுத்த முடிதல்.

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ)**

1. விலையை இலகுவாகத் தீர்மானிக்க
2. உற்பத்திப்பொருட்களை இலகுவாக மேம்படுத்த
3. திட்டங்களை இலகுவாகத் தயார் செய்ய
4. விற்பனைப் புரள்வை அதிகரிக்க
5. வணிகத்தின் நீடித்த வாழ்வை உறுதி செய்ய
6. போட்டிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க
7. வியாபார உடன்படிக்கைகளை இலகுவாக ஏற்படுத்திக்கொள்ள
8. உற்பத்திக் கிரயத்தை இலகுவாகக் கட்டுப்படுத்த
9. எதிர்கால வரிச் செலவுகளை இலகுவாகக் கணிப்பிட
10. எதிர்கால மற்றும் விசேட தீர்மானங்களை இலகுவாக எடுக்க

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iv) (அ) இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) வகிபாகத்தினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் காப்புறுதிக் கம்பனிகளால் வழங்கப்படும் பொதுக் காப்புறுதி வகைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(அ) காப்புறுதி செய்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் காப்புறுதித் தொழிலை முன்னேற்றுவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் காப்புறுதி நடவடிக்கைகளை வினைத்திறனாக்குதல்.

(02 புள்ளிகள்)

(ஆ)

1. தீயபாயக் காப்புறுதி
2. களவபாயக் காப்புறுதி
3. இயற்கை அனர்த்தக் காப்புறுதி
4. கடலபாயக் காப்புறுதி
5. மோட்டார் வாகனக் காப்புறுதி
6. பொறுப்புக் காப்புறுதி
7. வழிச் சரக்குக் காப்புறுதி
8. வழிப் பணக் காப்புறுதி

($^1/_2$ x 4 விடயங்கள் = 02 புள்ளிகள்)

(v) (அ) சமூக ஊடகப் பயன்பாட்டினால் வணிகமொன்றிற்கு ஏற்படும் பிரதிகூலங்கள் இரண்டினை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இடைநடுவரற்ற இலத்திரனியல் வர்த்தகத்தினால் வாடிக்கையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் இரண்டினை விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(அ)

1. தேவையற்ற விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருத்தல்
2. நன்மதிப்பு / பிரதிமை பாதிக்கப்படுதல்
3. தனித்துவமான பாதுகாப்பிற்கு இடர் காணப்படல் (cyber crimes)
4. வியாபாரம் தொடர்பான தவறான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படல்
5. வாடிக்கையாளருடன் நேரடி தொடர்புகள் காணப்படாமை
6. சட்டரீதியான இடர்
7. வாடிக்கையாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது கடினமாக இருத்தல்

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)

(ஆ)

1. வாடிக்கையாளரின் சக்தி, நேரம் என்பன சேமிக்கப்படுதல்
2. இலகுவாகவும் விரைவாகவும் பொருட்களுக்குக் கட்டளையிட முடிதல்
3. ஒப்பீட்டளவில் குறைவான விலை மட்டம்
4. அதிகளவு தெரிவுகளுக்கான சந்தர்ப்பம் கிடைத்தல்
5. வழங்குனருடன் நேரடித் தொடர்புகளைப் பேண முடிதல்

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)

4. (i) (அ) ஏற்பாட்டியலில் எண்ணியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதனால் வணிகமொன்றிற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்கள் வேகமாகவும் விரைவாகவும் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(அ)

1. கிரயம் குறைவடைதல்
2. அதிக துல்லியத்தன்மை (Accuracy)
3. உற்பத்தித்திறன் அதிகரித்தல்
4. நேரம் சேமிக்கப்படுதல்
5. சகல ஏற்பாட்டியல் முறைமையிலும் சுமூகமான தன்மை காணப்படல்
6. பின் தொடரக்கூடிய ஆற்றல் (ability to trace)
7. இருப்புக் கட்டுப்பாடு இல்குவாதல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

1. அழிவடையக்கூடிய பொருட்களை விநியோகிக்கும் போது
2. அவசர ஆவணங்களை அனுப்ப வேண்டியிருக்கும் போது
3. அவசர தேவைக்கான மருந்துப்பொருட்களை விநியோகிக்கும் போது
4. விசேட தேவைக்கான/ சந்தர்ப்பங்களுக்கான பொருட்களை விநியோகிக்கும் போது

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ii) (அ) தன்னியக்கக் களஞ்சிய முறைமையினால் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளும் நன்மைகள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) 'தரகு முகவர்', 'தரகர்' ஆகியோருக்கு இடையிலான வேறுபாட்டினை இனங்காண்க. (02 புள்ளிகள்)

(அ)

1. கிரயம் (ஊழியர் கிரயம்) குறைவடைதல்
2. முறையான மற்றும் வினைத்திறனான களஞ்சிய செயன்முறைகளைப் பேணலாம்
3. விரயம் குறைவடைதல்
4. இருப்புக் கட்டுப்பாடு இலகுபடுத்தப்படுதல்
5. இருப்புக்களைப் பாதுகாத்தல், விநியோகித்தல் இலகுபடுத்தப்படும்
6. களஞ்சியசாலையில் காணப்படும் இருப்புக்கள் தொடர்பான தகவல்களை தேவையான நேரத்தில் இலகுவாகப் பெறலாம்.

**($^1/_2$ x 4 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

| தரகு முகவர் | தரகர் |
|---|---|
| 1. முதல்வருக்கு அனுகூலமான வகையில் தனது விருப்பத்தினடிப்படையில் முதல்வர் சார்பாகப் பொருட்களைக் கொள்வனவு அல்லது விற்பனை செய்பவர் | 1. கொடுக்கல்வாங்கல்களுக்கு அமைவாக கொள்வனவாளர்களையும் விற்பனையாளர்களையும் தொடர்புபடுத்தி கொடுக்கல்வாங்கல் இடம்பெறத் தேவையான தகவல்களை வழங்குபவர் |
| 2. ஒருவரிடம் (முதல்வரிடம்) இருந்து மட்டும் தரகுப் பணம் பெறுபவர் | 2. இருவரிடம் (கொள்வனவாளர், விற்பனையாளர்) இருந்தும் தரகுப் பணம் பெறுபவர் |
| 3. பொருளின் மீது உரிமை காணப்படும் | 3. பொருளின் மீது உரிமை இல்லை |
| 4. பொருட்களை தன்வசப்படுத்தலாம் | 4. பொருட்களை தன்வசப்படுத்த முடியாது |

**(02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iii) (அ) போக்குவரத்தில் கொள்கலன்மயமாக்கலினால் இறக்குமதியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) கப்பல் தளம் மட்டும் இலவசம் (FOB) மற்றும் விலை ஈடு கேள்வு (CIF) ஆகிய விலையிடல்களுக்கு இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

**(அ)**

1. **பொருளுக்கான பாதுகாப்பினைப் (களவில் இருந்து) பெறலாம்**
2. **பொருளின் தன்மைக்கேற்ப கொள்கலன்களைத் தெரிவு செய்யலாம்**
3. **செயற்பாட்டுச் செயன்முறை வினைத்திறனானதாக வருதல்**
4. **ஒவ்வொரு தரப்பினராலும் தமது பொருட்களை வேறுபடுத்தி இனங்காண முடிதல்**
5. **போக்குவரத்துக் கிரயம் குறைவடைதல்**

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ) கப்பல் தளம் மட்டும் இலவசம் (FOB):**

**கப்பலில் ஏற்றும் வரையிலான கட்டணத்தையும் உள்ளடக்கியதாக பொருட்களுக்கான சகல செலவுகளும் உள்ளடக்கப்பட்டு நிர்ணயிக்கப்படும் விலையிடல்.** **(01புள்ளி)**

**விலை ஈடு கேள்வு (CIF):**

**பொருட்கள் இறக்குமதியாளர் துறைமுகத்தை அடையும் வரையில் ஏற்படும் காப்புறுதி மற்றும் கப்பற் கட்டணம் ஆகிய சகல செலவுகளும் உள்ளடக்கப்பட்டு நிர்ணயிக்கப்படும் விலையிடல்.** **(01 புள்ளி)**

(iv) (அ) சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் உற்பத்தி நாட்டுச் சான்றிதழின் நோக்கங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் வணிகமானது எவ்வாறு இலத்திரனியல் வர்த்தகத்தில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

**(அ)**

1. **தீர்வைக் குறைப்பு அல்லது தீர்வைச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்**
2. **குறித்த பொருளானது குறித்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்**
3. **சட்டரீதியற்ற வணிகத்தினை தடை செய்யலாம்**
4. **வணிகம் தொடர்பான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தலாம்**
5. **சர்வதேச வியாபார சட்ட நியமங்களுக்கு ஏற்ப பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்தலாம்**

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**(ஆ) இலத்திரனியல் வணிகம்:**

**கொள்வனவு விற்பனைக்கு மேலதிகமாக உற்பத்தி, சந்தைப்படுத்தல், நிதி நிர்வாகம், மனித வள முகாமைத்துவம் போன்ற சகல புறச் செயற்பாடுகளையும் நிகழ்நிலையில் கணினி வலையமைப்பின் மூலம் மேற்கொள்ளும் வணிகமாகும். இதனுள் இலத்திரனியல் வர்த்தகமும் உள்ளடங்கும்.**

**இலத்திரனியல் வர்த்தகம்:**

**கொள்வனவு, விற்பனை மற்றும் வியாபாரத்திற்கு உதவும் துணைச் சேவை கருமங்கள் அனைத்தும் நிகழ்நிலையில் கணினி வலையமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் வணிகமாகும்.**

**(ஒப்பிட்டு வேறுபடுத்த 02 புள்ளிகள்)**

(v) உற்பத்தி நிறுவனமொன்று ஒருங்கிணைந்த கணினி உற்பத்தி முறையினைப் (CIM) பயன்படுத்துவதனால் பெற்றுக்கொள்ளத்தக்க அனுகூலங்கள் நான்கினைத் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

1. உற்பத்திச் செயன்முறை முழுவதையும் தனியொருவரால் ஒழுங்குபடுத்த (regulate) முடியும்
2. தன்னியக்கமுறை மூலம் அடையாளம் காணப்படும் வேறுபாடுகள் தன்னியக்க கட்டளை மூலம் நிவர்த்தி செய்யப்படும்
3. உற்பத்தி செயன்முறை வினைத்திறனாகக் காணப்படும்
4. உற்பத்தித்திறன் அதிகரிக்கும்
5. ஊழியக் கிரயம் குறைவடையும்
6. உற்பத்திச் செயன்முறை விரைவாக நடைபெறும்
7. உற்பத்திச் செயன்முறையினை இலகுவாக ஒருங்கிணைக்கலாம்

**(01x 4 விடயங்கள் = 04 புள்ளிகள்)**

## பகுதி II

5. மாயாவும் காயாவும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் தாபித்தனர். நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான மாயா, ஊழியர்களின் வெவ்வேறு நடத்தை மற்றும் பணிகளின் தன்மைக்கேற்ப தனது தலைமைத்துவப் பாங்கினைக் கைக்கொள்கின்றார். தொழிற்றுறையின் சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும்போது இந்நிறுவனத்தின் உற்பத்திக் கிரயம் வானுயர்ந்து காணப்படுவதனால் செயற்பாட்டு முகாமையாளரான காயா உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான வழிவகைகளைக் கவனத்திற் கொண்டுள்ளார்.

(i) (அ) மாயா கைக்கொள்ளும் தலைமைத்துவப் பாங்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பணிகளின் தன்மைக்கேற்ப தலைவர்கள் தமது நடத்தைகளை ஏன் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

**(அ)** சூழ்நிலை தலைமைத்துவப் பாங்கு (Situational Leadership Style) **(02 புள்ளிகள்)**

**(ஆ)**

1. பணிகளின் சிக்கல்தன்மைக்கு எற்ப
2. ஊழியர்களின் தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப
3. ஊழியர்களின் ஊக்குவிப்பு மட்டத்திற்கு ஏற்ப
4. சூழ்நிலை மாற்றங்களிற்கு ஏற்ப

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ii) (அ) இத்தொழிற்சாலையின் ஊழிய உற்பத்தித்திறனை விருத்தி செய்துகொள்ளக்கூடிய வழிகள் **இரண்டினைச்** சிபாரிசு செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாயாவிடமுள்ள வலு மூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(அ)**

1. பயிற்றப்பட்ட ஊழியர்களை ஈடுபடுத்தல்
2. ஊழியர்களைப் பயிற்றுவித்தல்
3. நிதி மற்றும் நிதிசாரா ஊக்குவிப்புக்களை வழங்கல்
4. தர வட்டத்தைப் பின்பற்றுதல்
5. தொழில் வழங்குனர், தொழிலாளர்களுக்கிடையே சாதகமான உறவைப் பேணுதல்
6. செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ஆ)

1. சட்டரீதியான வலு / Authority Power
2. வெகுமதி வலு
3. தண்டனை வலு
4. நிபுணத்துவ வலு
5. செல்வாக்கு செலுத்தும் வலு
6. தகவல் வலு

**($^1/_2$ x 4 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(iii) (அ) தைத்த ஆடை உற்பத்தியில் சர்வதேச நியமங்களை உள்வாங்குவதனால் உற்பத்தியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திக் கழிவுகளைக் குறைப்பதற்கு தர உறுதிப்பாடானது எவ்வாறு உதவுகின்றது என்பதனை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(அ)

1. இலகுவாகச் சந்தையினுள் பிரவேசிக்கலாம்
2. இலகுவாகச் சந்தைப் போட்டியை எதிர்கொள்ளலாம்
3. இலாபத்தை அதிகரிப்பதனூடாக வணிகத்தை நிலைத்திருக்கச் செய்யலாம்
4. அதிக வாடிக்கையாளரைக் கவர முடியும்
5. சட்டச் சிக்கல்களைக் குறைக்க முடியும்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

**புள்ளியிடும் திட்டம் பக்கம் 32**
**வினா இலக்கம் 5 (iii) ஆ**

தொடர் பரிசோதனைகளின் மூலமாக உற்பத்தியில் நிகழக்கூடிய பலவீனங்களையும் தவறுகளையும் இனங்கண்டு அந்நேரத்திலேயே நிவர்த்தி செய்வதனூடாக இயலுமானவரை தவறுகளையும் விரயங்களையும் சீராக்குவதற்கு தர உறுதிப்பாடானது உறுதுணையாக இருக்கின்றது.

**(02 புள்ளிகள்)**

(iv) (அ) 'புள்ளிவிபரச் செயன்முறைக் கட்டுப்பாடு' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியில் புள்ளிவிபரச் செயன்முறைக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதன் மூலம் இவ்வணிகம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(அ) உற்பத்திச் செயன்முறையின் செயலடைவு தொடர்பாக அடையாளம் காணப்பட்ட தவறுகளைக் குறைக்கும் நோக்கில் தரவுகளைச் சேகரித்து வரைபடம், அட்டவணை மற்றும் படங்கள் மூலம் உரிய பிரிவினர்களுக்குத் தொடர்பாடல் செய்தல்.

**(02 புள்ளிகள்)**

(ஆ)

1. விரயத்தைக் குறைக்க முடியும்
2. கிரயங்களைக் கட்டுப்படுத்த முடியும்
3. வினைத்திறனை அதிகரிக்க முடியும்
4. உற்பத்தி வேறுபாடுகளை முன்கூட்டியே அடையாளங் காண முடியும்
5. உற்பத்திச் செயன்முறையின் ஓரினத்தன்மையைப் பேணுவதற்கான ஆற்றல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(v) பின்வருவன 2025 ஓகஸ்ட் மாதத்திற்கான மாயா மற்றும் காயா வணிகத்துடன் தொடர்புடைய சில தரவுகளாகும்.

| | |
|---|---|
| உண்மையான உற்பத்தி | - 17 800 அலகுகள் |
| உண்மையான மூலப்பொருள் பாவனை | - 10 500 கிலோகிராம் |
| ஓர் அலகிற்கான நியம மூலப்பொருள் பாவனை | - 0.5 கிலோகிராம் |
| நியம மூலப்பொருள் கிரயம் | - கிலோகிராமிற்கு ரூ. 4.50 |

மூலப்பொருள் பாவனை மாறற்றிறனைக் கணிப்பிட்டு, அம்மாறற்றிறனுக்கான காரணத்தினைத் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**உண்மையான மூலப்பொருள் பாவனை = 10,500 அலகுகள்**
**நியமப் பொருள் பாவனை 17800 x 0.5 = 8,900 அலகுகள்**
**(1,600) அலகுகள் (பாதகம்)**

1,600 x 4.50 = ரூபா -(7,200) (பாதகம்)

**(முழுமையான விடைக்கு 02 புள்ளிகள்)**
**(பாதகமான (-) விடை தரப்படாத பட்சத்தில் 01 புள்ளி)**

**காரணங்களாகப் பின்வருவனவற்றினுள் ஏதாவதொன்று எழுதப்படலாம்**

1. காலங்கடந்த, பழமையான இயந்திரப் பாவனையும், ஊழியப் பிரச்சினையும்
2. உற்பத்திச் செயன்முறையில் முறையான கண்காணிப்பின்மை
3. தரமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தாமை
4. விரயம் அதிகரித்துக் காணப்படுகின்றமை

**(02 புள்ளிகள்)**

6. அமலன் என்பவர் குழந்தைகளின் பாதணிகளுக்கான தேவை அதிகரிப்பதனை இனங்கண்டதன் மூலம் காலியில் பாதணி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தார். சந்தைக் கலவையினைத் தீர்மானிப்பது தொடர்பில் அவரால் பெற்றோர்களினதும் குழந்தைகளினதும் விருப்பங்களும் எதிர்பார்ப்புகளும் அளவையாய்விற்கு உட்படுத்தப்பட்டன. அதன்படி அமலனால் 'கிற்றா' எனும் பெயரிலான கவர்ச்சிகரமான பண்டக்குறியொன்று உருவாக்கப்பட்டதுடன் குழந்தைகளையும் பெற்றோர்களையும் இலக்காகக் கொண்ட விளம்பரப்படுத்தல், மேம்படுத்தல் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது குழந்தைகளுக்கான பாதணி விற்பனையானது இருமடங்காகியிருந்தது. ஆயினும் அமலன் காசுப் பாய்ச்சல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

(i) (அ) தனது உற்பத்திப்பொருட்களுக்கு அமலன் பயன்படுத்திய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கருவினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) விளம்பரப்படுத்தலுக்கும் பிரசித்தப்படுத்தலுக்கும் இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

**(அ) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு** **(02 புள்ளிகள்)**

**(ஆ) விளம்பரப்படுத்தல் என்பது பணக் கிரயத்தை ஏற்படுத்தக் கூடியதும் கட்டுப்படுத்தக் கூடியதுமானதாகும். அதேவேளை,**

**பிரசித்தப்படுத்தல் என்பது பணக் கிரயமின்றி தகவல்களை வழங்கக் கூடியதும் நிறுவனத்தினால் கட்டுப்படுத்த முடியாததுமாகும்.** **(02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ii) (அ) சிறந்த பண்டக்குறியொன்றின் குணாம்சங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) குழந்தைகள் பாதணிச் சந்தையினை நுண் மாக்கூறாக்குவதற்கு அமைவனால் பயன்படுத்தக்கூடிய அடிப்படைகள் இரண்டினைச் சிபாரிசு செய்க. (02 புள்ளிகள்)

(அ)

1. குறுகியதும் எளிமையானதுமாக இருத்தல்
2. உச்சரிப்பதற்கும் இனங்காண்பதற்கும் ஞாபகப்படுத்துவதற்கும் இலகுவானதாக இருத்தல்
3. உற்பத்திப்பொருளின் அடிப்படைப் பண்புகள் மற்றும் பயன்களை வெளிப்படுத்துவதாக இருத்தல்
4. இலகுவாக மாற்று மொழிகளில் (மொழி) மாற்றம் செய்யக்கூடியதாக இருத்தல்
5. போட்டியாளரது பண்டக்குறியிலிருந்து வேறுபடுத்துவது இலகுவானதாக இருத்தல்
6. (குறித்தவொரு) கலாசாரத்தினைப் பிரதிபலிப்பதாக இருத்தல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிக**

(ஆ)

1. மக்கட்தொகை / குடித்தொகை (demographic) ரீதியாக
2. பூகோள ரீதியாக /
3. உளவியல் ரீதியாக
4. நடத்தை ரீதியாக

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிக**

(iii) (அ) குழந்தைகளுக்கான பாதணிகளை வடிவமைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய உற்பத்திப்பொருள் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'கிற்றா' பண்டக்குறியைக் கொண்ட பாதணிகள், உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்திற்கமைய (PLC) எந்தக் கட்டத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை காரணமொன்றுடன் இனங்காண்க. (02 புள்ளிகள்)

(அ)

1. பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் உள்ளடக்கப்படாதிருத்தல்
2. பாதுகாப்பானவையாக இருத்தல்
3. அணிவதற்கு இலகுவானவையாக இருத்தல்
4. கவர்ச்சியானவையாக இருத்தல்
5. விலை வேறுபாடுடையவையாக இருத்தல்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளி**

(ஆ) வளர்ச்சிக் கட்டம் **(01 பு**

**காரணம்:**

- விற்பனை அதிகரித்துச் செல்லல்

**(01 x 1 விடயம் = 01 பு**

(iv) (அ) குழந்தைகளுக்கான பாதணிகளின் விலையினைத் தீர்மானிப்பதில் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) விற்பனைகள் அதிகரித்திருந்தபோதிலும் அமலன் காசுப் பாய்ச்சல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டமைக்கான காரணங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(அ)

1. உற்பத்திக் கிரயம்
2. வாடிக்கையாளர் கேள்வி
3. போட்டியாளர் விலை
4. இலாப எல்லை
5. பண்டக்குறி
6. விற்பனை செய்யுமிடம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

1. உற்பத்திக் கிரயம் அதிகரித்தல்
2. சந்தைப்படுத்தல் கிரயம் அதிகரித்தல்
3. விலையிடலின் வரையறைகள்
4. கடன்பட்டோரிமிருந்து சேகரிப்புக் காலம் அதிகமாக இருத்தல்
5. இருப்புக் கட்டுப்பாட்டிலுள்ள சிக்கல்கள்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(v) அமலன் தனது தனிப்பட்ட சேமிப்பினை அல்லது வங்கிக் கடனைப் பயன்படுத்தி தனது வணிகத்தை விரிவுபடுத்தத் திட்டமிடுகின்றார். நீர் அவருக்கு எத்தெரிவினைச் சிபாரிசு செய்வீர்? நீர் சிபாரிசு செய்த தெரிவில் காணப்படும் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**டும் திட்டம் பக்கம்: 35**

**இலக்கம் 6 (V)**

| தனிப்பட்ட சேமிப்பு | |
|---|---|
| கூலங்கள்: | பிரதிகூலங்கள்: |
| கிரயம் குறைவு<br>நிதி ரீதியாக இன்னொருவரில் (பிணைகளில்) தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை<br>உரிமையினைப் பாதுகாக்க முடிதல்<br>இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்<br>இடர் குறைவு | 1. அதிகளவான நிதியினைத் திரட்ட முடியாது<br>2. சொந்த சொத்துக்களுக்கு இடர் நேரிடும்<br>3. வரி அனுகூலங்களைப் பெறமுடியாது |
| (01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்) | (01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்) |

**அல்லது**

| வங்கிக் கடன் | |
|---|---|
| கூலங்கள்: | பிரதிகூலங்கள்: |
| அதிக நிதியினைத் திரட்டலாம்<br>வரி நன்மைகளைப் பெறலாம்<br>ல்வேறுபட்ட இலாபம் தரக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்யலாம்<br>நிறுவனத்தின் உரிமை பரவலாக்கப்படாது | 1. வட்டி செலுத்த வேண்டும்<br>2. நிதி ரீதியாக இன்னொருவரில் (பிணைகளில்) தங்கியிருக்க வேண்டும்<br>3. நிதி ரீதியிலான இடர்களைச் சந்திக்க நேரிடும் |
| (01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்) | (01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்) |



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

7. (i) (அ) 'முயற்சி மூலதனம்' (Venture Capital) என்றால் என்ன? (02 புள்ளிகள்)
(ஆ) திறைசேரி உண்டியல்களுக்கான முதலாம்தரச் சந்தைக்கும் இரண்டாம்தரச் சந்தைக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (02 புள்ளிகள்)

(அ) புதிய வணிகங்களை ஆரம்பிப்பதற்காக முயற்சி மூலதனக் கம்பனிகளால் வழங்கப்படும் மூலதனம் முயற்சி மூலதனம் எனப்படும்.
(02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது முதல்நிலை வணிகருக்குத் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தல் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையெனவும்
முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் ஏற்கனவே வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களை கொள்வனவாளருக்கும் ஏனையோருக்கும் காலம் முடிவடையும் முன் இடம்பெறும் கொள்வனவு விற்பனை இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையெனவும் அழைக்கப்படும்.
(02 புள்ளிகள்)

(ii) (அ) கம்பனி ஒன்றின் ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்படுவதன் நோக்கங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)
(ஆ) உரிமை மீதான திரும்பலுக்கும் (ROE) முதலீட்டின் மீதான திரும்பலுக்கும் (ROI) இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(அ)
1. மூலதனக் கட்டமைப்பைப் பலமாக்க முடியும்
2. முதலீட்டாளர்களை ஊக்குவிக்க முடியும்
3. உரிமை பரவலாக்கப்படமாட்டாது
4. அக நிதி மூலமாக மாற்றம் செய்ய முடியும்

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)

(ஆ)
**உரிமை மீதான திரும்பல் (ROE):**
சாதாரண பங்குரிமையாளர்களினால் வழங்கப்பட்டுள்ள மூலதனத்திற்கு உழைக்கப்பட்ட இலாப வீதம் உரிமை மீதான திரும்பல் எனப்படும்.

**முதலீட்டின் மீதான திரும்பல் (ROI):**
மொத்த முதலீடிற்கும் வணிகத்தின் உழைப்பிற்கும் இடையிலான தொடர்பினை வீதமாகக் காட்டுவது முதலீட்டின் மீதான திரும்பல் எனப்படும்.
(02 புள்ளிகள்)

(iii) (அ) 'ஒருவருக்கொருவரான நேர்முகப் பரீட்சை' (one-on-one interview) மற்றும் 'குழு நேர்முகப் பரீட்சை (Panel interview) ஆகியவற்றுக்கு இடையிலான இரண்டு வேறுபாடுகளை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர்களுக்கு நிறுவனம்சார் மன அழுத்தத்தினை ஏற்படுத்தும் காரணிகள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(அ)

| ஒருவருக்கொருவரான நேர்முகப் பரீட்சை (One-On-One Interview) | குழு நேர்முகப்பரீட்சை (Panel Interview) |
|---|---|
| • ஒருவரினால் மேற்கொள்ளப்படும் | • இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களால் மேற்கொள்ளப்படும் |
| • தீர்மானமானது ஒருவரினால் எடுக்கப்படுவதனால் பக்கச்சார்பானதாக அமையலாம் | • தீர்மானமானது பலரினால் எடுக்கப்படுவதனால் பெரும்பாலும் பக்கச்சார்பற்றதாக அமையும் |
| • குறுகிய நேர்காணலாகக் காணப்படும் | • பரந்த நேர்காணலாகக் காணப்படும் |
| • முறைசார்ந்த (சம்பிரதாயபூர்வமான) நெறிமுறைக்குட்பட்ட தன்மைகள் குறைவு | • முறைசார்ந்த நெறிமுறைக்குட்பட்ட தன்மைகள் அதிகம் |

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

1. அதிகரித்த வேலைப் பழு
2. அடையமுடியாத இலக்குகளை வழங்குதல்
3. வேலைச் சூழலும் வேலை நேரமும் மாற்றமடைதல்
4. வினைத்திறனற்ற தொடர்பாடல் காணப்படல்
5. முகாமைத்துவத்தின் குறைந்தளவான ஒத்துழைப்பு

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(iv) (அ) செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர் ஒருவருக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டினை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வதனால் உள்வாரி ஊழியர்கள் எதிர்நோக்கும் பாதகமான தாக்கங்கள் இரண்டினை விளக்குக. (02 புள்ளிகள்)

1. ஊழியர் ஊக்கப்படுத்தப்படுவர்
2. தொழில் வழங்குனரின் ஊழியர் மதிப்பீட்டின் மூலமான நன்மைகளைப் பெறலாம்
3. எதிர்கால பதவி உயர்வுக்கான வாய்ப்புக்கள் காணப்படல்
4. தனது உழைப்பினை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பு காணப்படல்
5. பயிற்சிக்கான தேவையினை இனங்காணலாம்
6. வேலைத் திருப்தி அதிகரித்தல்
7. பலத்தினை அடையாளம் காணலாம்
8. முன்னேற்றப்பட வேண்டிய விடயங்களை இனங் காணலாம்
9. ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்யலாம்

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)

ஏற்கனவேயுள்ள ஊழியர்கள் ஊக்கமிழப்பர்
பதவியுயர்வுக்கான வாய்ப்புக்கள் குறையும்
தற்போதைய மற்றும் புதிய ஊழியர்களுக்கிடையே தொழில் ரீதியான பிணக்குகள் ஏற்படும்
ஊழியர் புரள்வு அதிகரித்தல்
பாதகமற்ற பக்கச்சார்பான சூழ்நிலை உருவாதல்

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(v) (அ) மனித வள தகவல் முறைமையினைப் (HRIS) பயன்படுத்துவதனால் மனித வள முகாமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினை விளக்குக.

1. உபகரணங்களை அடிப்படையாகக் கொண்ட இணையம் (Internet of Things - IoT)
2. ஒரு தடவைக்கான கடவுச்சொல் (One Time Password - OTP) (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(அ)

1. மனித வளத் திட்டத்தை இலகுவாகத் தயாரிக்கலாம்
2. ஊழியர்களை வினைத்திறனாக மனித் வள முகாமை செய்யலாம்
3. ஊழியர் தொடர்பான தீர்மானமெடுத்தல் இலகுவாகும்
4. மனித வளத்தினை இலகுவாக எதிர்வு கூறலாம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

**உபகரணங்களை அடிப்படையாகக் கொண்ட இணையம் (Internet of Things – IoT):**

இணையம் மூலம் பல சாதனங்கள் ஒன்றுக்கொன்று தகவல்களைப் பகிர்ந்து தானாகவே செயற்படும் அமைப்பு. அதாவது, மனிதர்களின் நேரடிச் செயற்பாடு இல்லாது சாதனங்கள் தாமாகவே முடிவெடுத்துச் செயற்படும் தொழில்நுட்பம்.

**ஒரு தடவைக்கான கடவுச்சொல் (One Time Password – OTP):**

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பாதுகாப்புக் குறியீடு.

**(ஒரு விடயத்துக்கு மட்டும் 02 புள்ளிகள்)**

8. (i) (அ) வணிகத் தொடர்பாடலை முன்னேற்றுவதற்கு தகவல் தொழில்நுட்பம் உதவும் வழிகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'மெய் நேர தரவு செயன்முறைப்படுத்தல்' (Real-time data processing) மற்றும் 'தொகுதித் தரவு செயன்முறைப்படுத்தல்' (Batch data processing) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக. (02 புள்ளிகள்)

(அ)

1. மின்னஞ்சல் மூலமான உடனடித் தகவல் பரிமாற்றம்
2. காணொளிக் கலந்துரையாடல்
3. அக இணையத்தினூடாக
4. இலத்திரனியல் கோவைப் பரிமாற்றம்
5. அக மற்றும் புற ரீதியான வலையமைப்புக்களைப் பயன்படுத்தல் மூலம்
6. நிகழ்நிலைச் செயற்பாடு (உதா:- தொலைக் கணினி வசதி)

**($^1/_2$ x 4 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ) **மெய் நேர தரவு செயன்முறைப்படுத்தல்:**
**(Real Time Data Processing)**

தரவுகள் திரட்டப்பட்ட உடனேயே செயன்முறைக்குட்படுத்துதல்

**தொகுதித் தரவு செயன்முறைப்படுத்தல்:**
**(Batch Data Processing)**

தரவுகள் சேகரிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தின் பின் தொகுதியாக்கப்பட்டு செயன்முறைக்குட்படுத்துதல்.

**(02 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

(ii) (அ) கொடுப்பனவு நுழைவாயிலைப் (Payment gateway) பயன்படுத்துவதனால் வணிகம் ஒன்றின் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் திட்டம் ஒன்றிற்குச் சந்தை ஆய்வு தேவைப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினைப் பரிந்துரைக்குக. (02 புள்ளிகள்)

(அ)

1. பாதுகாப்பாகக் கொடுக்கல்வாங்கலைச் செய்ய முடியும்
2. தன்னியக்கமாக (24 மணி நேரம் / 7 நாட்கள்) இலகுவாகக் கொடுக்கல்வாங்கலைச் செய்யலாம்
3. கொடுக்கல்வாங்கலின் உண்மைத்தன்மையினை உறுதி செய்யலாம்
4. கொடுக்கல்வாங்கல் தொடர்பான கிரயம் குறைவடையும்
5. பூகோள ரீதியாகக் கொடுக்கல்வாங்கலைச் செய்யலாம்

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(ஆ)

1. புதிய வணிகங்களை ஆரம்பிக்கும் போது
2. புதிய உற்பத்திப்பொருட்களை அறிமுகப்படுத்தும் போது
3. புதிய பிரதேசங்களின் சந்தையில் உட்பிரவேசிக்கும் போது
4. இலக்கு வாடிக்கையாளரை இனங்காணும் போது
5. போட்டியாளரை இனங்காணும் போது
6. விலைத் தந்திரோபாயங்களைத் தீர்மானிக்கும் போது
7. புதிய மேம்படுத்தல் தந்திரோபாயங்களைத் தெரிவுசெய்யும் போது
8. தற்போதைய உற்பத்திப்பெருட்களை நவீனமயப்படுத்தும் போது

**(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)**

(iii) (அ) எழுத்திலான வணிகத் திட்டம் ஒன்றினைக் கொண்டிருப்பதன் மூலம் நிறுவனமொன்றிற்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) 'உற்பத்தி மேந்தலைக் கிரயம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(அ)

1. நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமையும்.
2. நிறுவனத்திற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க முடியும்.
3. நிறுவனத்தின் செயற்றிறனை மதிப்பிட அதாவது, வணிகச் செயற்பாடுகளின் வெற்றிகளை அளவிட (சாத்திய வள மதிப்பீடு) முடியும்.
4. அக்கறையுடைய தரப்பினருக்கு நிறுவனம் தொடர்பாக விளக்கமளிக்கலாம்
5. நிறுவனமானது எதிர்காலத்தில் எவ்வழியில் செல்ல வேண்டும். அடைய வேண்டிய இலக்குகள் எவை என்பதனை எடுத்துக் காட்டலாம்.
6. நிறுவனத்திற்குத் தேவையான வளங்களை அறிந்து கொள்ளவும் பங்கீடு செய்யவும் முடியும்.
7. நிறுவனத்தின் பதவிகளுக்காக ஊழியர்களைக் கவர முடிதல்.
8. நிறுவனத்தை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் இலகுவாயிருக்கும்.

**(01 x 2 விடயங்கள் = 2 புள்ளிகள்)**

(ஆ) உற்பத்தி நடவடிக்கைகளுக்குரிய செலவுகளாக இருக்கின்ற போதிலும் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து **நேரடியாக வேறுபடுத்தி இனங்காண முடியாத வகையில் பொதுவாக ஏற்படும் சகல நேரில் கிரயங்களும்** மேந்தலைக் கிரயங்களாகும்.

**(02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iv) (அ) வணிகத் திட்டமொன்றினை உருவாக்குவதில் அந்நிறுவனத்தின் தூரநோக்கு எவ்வாறு உதவுகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) நாடொன்றின் திறனுள்ள ஊழியப்படையின் வெளியேற்றமானது உற்பத்தித் துறையின் வணிகத் திட்டமிடலில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(அ) நிறுவனமானது எதிர்காலத்தில் எவ்விடத்திற்கு செல்ல வேண்டும்? எதை அடைய வேண்டும்? என்பதனைத். தூரநோக்கின் மூலம் வெளிப்படுத்தலாம். அதற்கேற்ப நிறுவனத்திற்கான எதிர்காலத் தந்திரோபாயங்களை வணிகத் திட்டமொன்றின் மூலம் திட்டமிடுவதற்குத் தூரநோக்கு வழிகாட்டுகிறது.

(02 புள்ளிகள்)

(ஆ)

தேர்ச்சி மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்துவது ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சியளித்தல் கிரயங்களை அதிகரிப்பதுடன் பயிற்சிக்கான தேவையினை அதிகரிக்கின்றது. அத்துடன் சம்பள மட்டங்களையும் உயர்வடையச் செய்கின்றது. இதன் காரணமாக நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் என்பன குறைவடைகின்றது.

(02 புள்ளிகள்)

ஏதாவது 2X1= (02 புள்ளிகள்)

(v) (அ) 'தொழிற்படு மூலதன முகாமை' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) வணிகச் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் நிதி சாரா அளவீடுகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(அ) வணிகமொன்றின் நாளாந்த செயற்பாடுகளை சுமூகமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வது தொடர்பில் தேவையான நிதியினை (நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள்) உறுதிப்படுத்துவது தொடர்பாக இடம்பெறும் முகாமைத்துவச் செயன்முறை தொழிற்படு மூலதன முகாமை எனப்படும்.

(02 புள்ளிகள்)

(ஆ)

1. வாடிக்கையாளர் திருப்தி
2. ஊழியர் திருப்தி
3. அக்கறையுடைய தரப்பினர் நிறுவனம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளும் தன்மை
4. ஊழியர் புரள்வு
5. வணிகத்தின் சமூகப் பொறுப்பு
6. புத்தாக்கம்
7. உற்பத்திபொருளின் தரம்
8. தொழில் உறவு
9. ஊழியர்களின் முறைப்பாடுகள்
10. ஊழியர் வரவின்மை

(01 x 2 விடயங்கள் = 02 புள்ளிகள்)

******